# Secrets of Khalwath

***In Arabic:*** **Imam Muhiyadeen Ibne Arabi Radiallahu Anhu.**

***In Tamil:*** **As-Shaikh Sufi Hazrath Kahiri Radiallahu Anhu.**

# கல்வத்தின் இரகசியங்கள்

*அரபி மூலம்:* **ஹஜ்ரத் முஹிய்யத்தீன் இபுனு அரபி ரலியல்லாஹுஃ அன்ஹுஃ அவர்கள்.**

*தமிழில்:* **அஷ்ஷெய்குல் காமில் ஷெய்கு அப்துல் காதிர் ஸூபி ஹஜ்ரத் காஹிரி ரலியல்லாஹுஃ அன்ஹுஃ அவர்கள்.**

## மு க வு ரை

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடை யோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் இதனைத் துவங்குகிறேன்.

ஹளரத் கௌதுல் அஃளம் ரலியல்லாஹுஃ அன்ஹுஃ அவர்களது அருளும், ஆசியும் மிக்க அவர்களது மைந்தர் ஹளரத் முஹ்யித்தீன் இபுனு அரபி ரலியல்லாஹுஃ அன்ஹுஃ அவர்கள் எத்தன்மை வாய்ந்த மகான் என்பதை இங்கு விளக்க வேண்டிய தேவையில்லை என்பதை எவரும் அறிவர். ஏன்? அவர்களது பெருந்தன்மைப்பற்றி அறியாதார் இல்லை முஸ்லிம் உலகில். ஹகீகத்து -அகமியம் பற்றிய அவர்களது பற்பல நூல்களுள் **“அத்தது பீறாதுல் இலாஹிய்யா பில்மம்லகதில் இன்ஸானிய்யா”** என்ற அரபி மொழி நூலை, தமிழில் மொழி பெயர்த்துத் தந்துதவும்படி **ஹிஸ்புல்லாஹ் சபையினர்** ஆவலோடு என்னைக் வேண்டிக் கொண்டனர்.

எனவே மூல நூலின் கருத்துக்கு வேறுபடாமல், ( ) பிறை வடிவுக்குள் தெளிவுரைக் குறிப்புகளை அமைத்து,எளிதில் எவரும் புரிந்துணரக்கூடிய தன்மையில்தமிழாக்கி“**அஸ்ராருல் கல்வத்**”என்ற நாமத்தோடு வெளியிட உதவி புரிந்த அல்லாஹ்வுக்கே சர்வ புகழும்!

இந்த தமிழாக்க நூலுக்கு இனியதொரு தலை உரை எழுதிப் போர்த்து இதனை அச்சிட்டு வெளியிட முன்வந்த நமது **ஹிஸ்புல்லாஹ் சபை** யினருக்கும் இதற்காக எனக்கு ஊக்கமளித்த அன்பர்களுக்கும் இதனை வாசித்துணரும் நேயர்களுக்கும், உலக முஸ்லிம்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல

*ஹக்குதஆலா சகல துறையிலும் நல்லருள் புரிந்து நேர்வழி செல்ல அருள் பாலிப்பானாக! ஆமீன்.*

இவ்வண்ணம்

1.1.1970 **முஸ்லிம்களின் ஊழியன்**

மொழிப்பெயர்ப்பாசிரியர்

## தலை உரை

*ஹளரத் கௌதுல் அஃளம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களது அருளும் ஆசியும் மிக்க ஹளரத் முஹ்யித்தீன் இபுனு அரபி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ஹகீகத்து -அகமியம் சம்பந்தமான நூற்கள் ஏராளமுண்டு.அவற்றுள்* ‘**அத்ததுபீறாதுல் இலாஹிய்யா**’ *என்ற அரபி மொழி நூலை, எவர்க்கும் தெளிவாக விளங்கவைக்கும் வண்ணம் இனிய தமிழில் மொழிபெயர்த்து* ‘**அஸ்ராருல் கல்வத்**’*என்ற நாமத்தோடு வெளியிடுகின்றோம். இதே நூல் தமிழ் மொழியில்* **அல் அன்வாறு** *என்ற நாமத் தோடு மற்றொரு அன்பரால் வெளியிடப்பட்டிருப்பது பாராட்டத்தக்கதே. எனினும் ( ) பிறை வடிவுள் விரிவுரைக் குறிப்புகளோடு, தெளிவாகவும், மூல நூலுக்கு ஏற்ப கருத்துக்கள் விடுபடாமலும் தமிழில் வெளியிடப்படும் இந்நூல் ஆத்மீகத்துறையில் முன்னேறி மஃரிபாவின் நற்பாக்கியம் பெற்று உயர் பதவி பெறவேண்டுமென்றுள்ள உத்தமர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இதைக் கொண்டு அல்லாஹ் உங்களுக்கும் எங்களுக்கும் நல்லருள் பாலிப்பானாக.*

*எங்கள் வேண்டுகோளை ஏற்று சிறப்பான முறையில் இதைத் தமிழாக்கம் செய்து தந்த எங்களது மகிமைமிக்க குருநாதர், ஷெய்குனா,வமுர்ஷிதுனா ,அல்ஹாஜ் ஷெய்கு அப்துல் காதிர் ஆலிம் காதிரீ,நூரீ, ஸித்தீகீ அவர்களுக்கு எங்களது அகங்குளிர்ந்த நன்றி.*

வஸ்ஸலாம்.

காயல்பட்டணம்.

1.1.1970 இப்படிக்கு

**ஹிஸ்புல்லாஹ் சபை**

## இரண்டாம் பதிப்புரை

*அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் துவங்குகின்றோம்.*

*ஞானப் பெருங்கடலும் அவுலியாக்களின் பேரரசருமாகிய ஹழரத் கௌதுல் அஃலம் முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரலியல்லாஹுஅன்ஹு அவர்களது அன்பு மைந்தர் ஹழரத் முஹ்யித்தீன் இபுனு அரபி ரலியல்லாஹு அன்ஹு அவர்களது "***ஹகீகத்து***" அகமியம் பற்றிய பலதரப்பட்ட நூல்களுள் பிரசித்தமான நூலாகிய "***அத்தது பீறாதுல் இலாஹிய்யா பில் மம்லகதில் இன்ஸானியா***" எனும் அரபு நூலை தமிழ்நாடு காயல்பட்டணத்தைச் சேர்ந்த எங்களது மகிமைசேர் குருநாதர்-ஞான வேந்தர் ஷெய்குனா வமுர்ஷிதுனா அல்ஹாஜ் மௌலானா மௌலவி பாழில் ஷெய்கு அப்துல் காதிர் ஸூபி ஆலிம்நூரி ஸித்தீகி காதிரி காஹிரி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்கள் மூலப்பிரதியினின்றும் சற்றும் பொருள் பிசகாது தமிழாக்கம் செய்து தேன் தமிழ்ச்சாற்றில் தீன்மறை கருத்துக் களை "***அஸ்ராருல் கல்வத்***" "***கல்வத்தின் இரகசியங்கள்***" எனும் தலைப்பு கொண்ட நூலாகத் தந்த ஞானப் புதையலை அன்னாரின் சீடர்களும், மற்றுமுள்ள, இறைநேயர்களும் படித்தின்புறுதல் வேண்டும் என்கிற நன்னோக்கில் அவர்களின் நினைவார்த்தமாக இஃதை மறு பிரசுரஞ் செய்ய விரும்பியதன் விளைவே, இப்போழ்து உங்களது பொற்கரங்களில் தவழும் இந்நூலாகும்.*

*இச்சிறு நூலை மறுபிரசுரஞ்செய்து வெளியிட அனுமதி வழங்கிய காயல் நகர் ஹிஸ்புல்லாஹ் சபையினருக்கும் இந்நூலை வெளியிட அனைத்து துறைகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் அல்லாஹ்வின் நல்லருளும் நல்லாசியும் கிட்டுவதற்கு துவா செய்வதுடன் எங்களது இனிய நன்றியையும் சமர்ப்பிப்பதில் மகிழ்கின்றோம். வஸ்ஸலாம்.*

## மூன்றாம் பதிப்புரை

*அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹுதஆலாவின் திருப்பெயரால் துவக்கம். புகழ் அனைத்தும் அவனுக்கே உரித்தாகுக:*

*கருணையும், ஈடேற்றமும் காருண்ய சீலர், நபிகள் நாயகர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களது கிளைஞர்கள், தோழர்கள், இறையன்பர்கள்,மெய்விசுவாசிகள் அனைவர்கள் மீதும் உண்டாகட்டும்.*

*சுல்தானுல் ஆரிபீன், ஷெய்குல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மெஞ்ஞான அகமியச் சோலையில் பூத்த மலர்களில் ஒன்றான "***அத்தது பீறாதுல் இலாஹிய்யா பில் மம்லகதில் இன்ஸானியா***" என்ற அரபி நூலை தமிழாக்கம் செய்து "***அஸ்ராருல் கல்வத்***" "***கல்வத்தின் இரகசியங்கள்***" என்று பெயர் சூட்டி வெளியீடு செய்து தந்த மஹான் எங்கள்ஷெய்குனாமௌலானா மௌலவி பாழில் ஷெய்கு அப்துல் காதிர் ஸூபி ஹழ்ரத் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ் அவர்களின் இந்நூல் முதலாம், இ*

*ரண்டாம் பதிப்புகள் இறைஞான காதலர்களுக்கு அதிலும் குறிப்பாக ஷெய்குனா அவர்களின் முரீதீன்கள், முஹிப்பீன்களுக்கு மிகமிக பயனுள்ளதாக அமைந்தது என்றால் மிகையாகாது. அந்நறுமண மலர் வாடா மலராக இருக்கவும், சகலரும் முத்தி முகற்ந்திடவும், மூன்றாம் பதிப்பு செய்து வெளியிடுவதில் பேரானந்த மடைகின்றோம், அல்ஹம்துலில்லாஹ்.*

*இம்மூன்றாம் பதிப்பு மலர் மணம் வீச அனைத்து துறைகளிலும் உறுதுணையாக இருந்த முரீதீன் கள், முஹிப்பீன்கள் அனைவருக்கும் இறையருளும், நபிகள் நாயகம்ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நல்லாசியும், மஹான் இப்னு அரபி ரலியல்லாஹு அன்ஹு அவர்களது துஆ பரக்கத்தும் கிடைக்க இருகரமேந்தி இறைஞ்சுகிறோம்.*

1.1.2009

**இங்ஙனம்**

**ஹிஸ்புல்லாஹ் சபை, ஸூபி மன்ஸில்கள்**

**இந்தியா,சிறிலங்கா.**

*பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.*

# கல்வத்தின் இரகசியங்கள்

## (அஸ்ராருல் கல்வத்)

*அக்லு என்னும் யுக்தியைப் புதுமையாகப் படைத்து நன்கொடையாக அளித்தவனும், நக்லு என்னும் சுருதியை ஆதாரமாக நிறுத்தி சன்மார்க்க மாக ஆக்கியவனுமாகிய அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும்; அவனுக்குரியதே சர்வ உபகாரமும் நன்றியும் சர்வசக்தியும், திரும்புதலும் அவனைக் கொண்டேயாகும். மகத்துவமிக்க அர்ஷையுடைய அவனை யல்லாது வேறு நாயன் இல்லை.*

*எவர்களைக் கொண்டு நேர்வழியின் விருதுக் கொடிகளை நிலைநாட்டி, நூர் என்னும் ஒளிப் பிரகாசத்தை (குர்-ஆனை)க் கொண்டு அனுப்பியருளி, அதைக் கொண்டு தான் நாடிய வர்களை வழிகாட்டியும், தான் நாடியவர்களை வழிதவறி நடந்திடவும் செய்தானோ அந்த உத்தமப் புருஷர் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களது சங்கைமிக்க கிளைஞர்கள், பரிசுத்தத் தோழர்கள் மீதும், அவர்களை நன்றி விசுவாசத்துடனும் பின்பற்றித் தொடர்ந்து நடப்பவர்கள் அனைவர் மீதும் இறுதித்தீர்ப்பு நாள் வரையிலும் அல்லாஹ் ஸலவாத்தும் (ஸலாமும்) அருள்வானாக.*

மதிப்பிற்குரிய நண்பா! இறைவழி நடக்கும் வகை விபரத்தையும், அவனது சமுகம் செல்வது பற்றியும் உமது வினாக்கள் நமக்குச் சந்தோசத்தைக் கொடுத்தன. அவற்றிற்கு நூல் வடிவில் பின்வரும் விடைகளை எழுதியுள்ளேன்.

அறிந்து கொள்ளும்! உஜூதில் - உள்ளமையில் அல்லாஹ்வையும் அவனது செயல்களையும் தவிர வேறில்லை. எல்லாம் அவனே. யாவும் அவனைக் கொண்டே நிலைத்திருக்கின்றன. அவனளவிலே யே மீளுகின்றன. கண்ணிமைப்பொழுதாவது அல்லாஹு தஆலா ஆலத்தை - அகிலத்தை விட்டும் மறைந்து கொண்டானேயானால் முழு உலகமும் ஒரேயடியாக இல்லாமலாகிவிடும். ஆகவே, உலகத்தின் நிலை அல்லாஹ்வின் கிருபையைக் கொண்டும், பாதுகாவலைக் கொண்டுமேயல்லாது சாத்தியமில்லை. அல்லாஹ்வினுடைய ஒளி-நூர் மிகக் கடுமையாக வெளியானதினால் புலன்களால் எட்டிக்கொள்ள முடியாமலாகவே அதற்கே திரை என்று சொல்கிறார்கள்.

முதலில் இப்பாதையின் நிலைமைகளையும், அதில் நடப்பவர்களுக்குரிய விதிகளையும் விளக்கிவைப்பது அவசியமெனக் கருதுகிறேன். அதன் பின்பு, அல்லாஹ் அளவில் சேருவதையும், அவன் சமூகத்தில் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுங்குகளையும் விபரிக்கின்றேன். அங்கு சேர்ந்த பின்பு அங்கு எவ்விதம் உங்களை அழைக்கப்படும், என்னென்ன வார்த்தைகள் பேசப்படும்,அப்பால் நீங்கள் உங்களுடைய புலனுலகுக்கு எப்படி வருவீர்கள் என்பதையும், இன்னும், புலனுலகுக்கு மீண்டு வராமல் பனாபில்லாஹ்வில் - நாஸ்தியிலேயேயிருப்பதைப் பற்றியும் சொல்வேன்.

சங்கையுள்ள என் சகோதரா அறிந்து கொள்ளும்!மேற்கூறிய நோக்கத்தைச் சித்தியாக்கிக் கொள்ளப் பல வழிகள் உள்ளன. ஆனால், வழிகள் பல என்பது அல்ல.வழி நடப்பவர்கள் உடைய நிலை மைகள் விதர்ப்பமாகவும், பலவாகவும் இருப்பதனால் பாதைகளும் பலவாகின்றன.

உதாரணமாக, ஒருவனுடைய சுபாவம் சரிசமமாகவும், நடுநிலைமையாகவும் இருக்கும். இன் னொருவருக்கு அப்படியில்லாமலிருக்கும். ஒருவரில் ஆசை அதிகமாகவும், இன்னொருவரில் குறை வாகவும் இருக்கும்.ஒருவரில் ஆத்மவலிமை பலமாகவும்,இன்னொருவரில் பலவீனமாகவும் இருக்கும். ஆகவே, இந்த நிலைமைகளுக்குத் தக்கவாறே அவர்களில் இபாதத்தின் - வணக்கத்தின் ஆர்வமும், பிரயாசையும் தெண்டிப்பும் தோற்றமாகும். எக்குணம் குறைவாக இருக்கின்றதோ அதைச் செவ்வையாக்க வேண்டும். சிலரில் நற்குணங்ளெல்லாம் ஒன்றுபோல் அமைந்திருக்கும். அதனால், அவர்களுக்குப் பாதை மிகவும் எளிதாகிவிடுகிறது. சிலரில் கெட்ட குணங்களெல்லாம் ஒன்று சேர்ந்திருக்கும். அதனால்,அவர்கள் இந்தப்பாதை மிகவும் கஷ்டமானது என்று கருதுகிறார்கள்.இவர்கள் இரு சாரார்களுக்கும் மத்திபத்தில் உள்ளவர்களை மத்திபமாகக் கருதவும்.

முதன்முதலாக வதன் - தேசம் என்றால் என்னவென்றும், வதன் என்பதற்கு நாம் என்ன கருத்து வைக்கின்றோம் என்பதையும் நீங்கள் அவசியம் அறியவேண்டும். அதமிலிருந்து - இல்லாமையிலிருந்து உஜூது - உள்ளமைக்கு வரக்கூடிய வர்கள் எங்கெங்கு தங்கித்தங்கி வருகிறார்களோ அந்தத்தங்கு

*துறைக்குத்தான் வதன் என்று சொல்லப்படும். அவை மொத்தம் ஆறு. இவற்றை நீங்கள் தெரிந்து கொள்வதனால் அவைகளில் உங்களை என்ன நோக்கத்திற்காக அனுப்பப்பட்டது என்பதுவும் உங்களுக்குத் தெரிய வரும். அப்பால் அந்த நோக்கம் நிறைவேறுவதற்காக முயற்சி செய்யுங்கள் மறதியாயிருந்துவிடாதீர்கள்.*

*முதல் வதன் அலஸ்து பிறப்பிகும் - நான் உங்கள் நாயன் அல்லவா? என்று உங்களிடம் கேட்கப்பட்ட ஆன்ம உலகம். இந்த வதன் உடைய காலம் கழிந்து விட்டது. ஏனெனில் நாம் இப்போது, இரண்டாவது வதன் ஆகிய துன்யா உலகுக்கு வந்திருக்கின்றோம். மூன்றாவது வதன் பர்ஜக் உடைய ஆலமாகும். அது மரணத்துக்குப் பின்பு கியாமத்து நாள் வரையிலுமுள்ள உலகமாகும். நான்காவது வதன் ஸாபிறா, ஹாபிறா என்ற மஹ்ஷரின் தங்குதுறை.(ஸாபிறா என்றால் விழித்திருப்பது.ஹாபிறா என்றால் வெறும் காலோடிருப்பது என்று பொருள். அதாவது - கியாமத்து நாள் அங்கு எல்லோர்களும் தூக்கமற்று விழித்தவர்களாகவும், வெறும் காலோடும் இருப்பார்கள்.) ஐந்தாவது வதன் சொர்க்கம் அல்லது நரகம். ஆறாவது வதன் கதீபுல் அபுயளு - வெண்மணல் திடல்.அதில் அல்லாஹு ஜல்ல ஷானுஹு வத ஆலா வினுடைய தியிருப்பதைப் பற்றியும் சொல்வேன்.*

*இந்த ஒவ்வொரு வதனிலும் பற்பல மர்தபா -பதவிகளும், தரஜாக்களும் -படித்தரங்களும் உண்டு அவையனைத்தையும் பூரணமாக விபரிப்பது மனித சக்திக்குப் புறம்பானதாகும். இங்கு, நாம் இந்த துனியாவுடைய வதனைத் தவிர மற்றெந்த வதன்களைப் பற்றியும் விபரிப்பது அவசிய மில்லையெனக் கருதுகிறோம்.*

*அறிந்து கொள்வீராக! அல்லாஹுதஆலா நம்மை, அதம் என்ற இல்லாமையிலிருந்து உஜூது - உள்ளமைக்கு யாத்திரீகர்களாகவே தான் படைத்திருக்கின்றான். நாம் போய்ச் சேர்ந்து தங்கித் தரிபாடாக இருக்குமிடம் சொர்க்கம் அல்லது நரகம். இவ்விரண்டைத்தவிர வேறில்லை. ஒவ்வொரு மனிதருடைய சுவர்க்கமும் , நரகமும் வெவ்வேறாகவும், பற்பலவிதமாகவும் இருக்கும். அதாவது அவரவர்களுடைய அமல் - கிரியைகளுக்குத் தக்கபடியேயாம். ஆகவே, இந்த யாத்திரை மிகவும் பயங்கரத்தையும், சங்கடத்தையும், துன்பத்தையும் உடையதாகும் என்பதை ஒவ்வொரு அறிவாளி யும் அவசியம் தெரிந்திருக்கவேண்டும். கஷ்டமான வாழ்க்கையில் பொறுமை செய்வதைக் கொண்டுதான் இந்த யாத்திரையை முடிக்கவேண்டும்.*

*இந்த யாத்திரையின் ஒவ்வொரு தங்குமிடமும் விகற்பமான சீதோஷ்ணத்தை உடையதாகும். அதே போன்று ஒவ்வொரு தங்குமிடத்திலும் இருக்கக் கூடியவர்கள் எல்லோரும் ஒரே சுபாவம் உடையவர்களாகவும் இல்லை. இப்புதிய யாத்திரைக்காரனோ கொஞ்சநேரம் அங்கு விருந்தாளியாகவேபோகிறான். ஆகையால், இந்த யாத்திரையில் ஒவ்வொரு தங்குமிடத்திற்கும் அவசியமான சாமான்களைத் தயார் செய்து கொள்வதும் தவிர, வழியின் கஷ்ட நஷ்டங்களையும் அவசியம் தெரிந்திருக்க வேண்டும்.*

*நம்முடைய இந்தப் பேச்சு துன்யா-இம்மை உடைய வேலையையே செய்து கொண்டும்,இவ் வற்ப உலக வாழ்க்கையின் இன்பத்திலேயே உயிரை*

*மாய்த்துக்கொண்டும் இருக்கக்கூடியவர்களோடு இல்லை; அவர்கள் இந்த ப் பேச்சுக்கு இலாயக்கற்றவர்கள் எனக் கருதுகிறோம்.*

*நாம் பேசுவதெல்லாம் இவ்வுலக வாழ்விலேயே ஹக்குதஆலாவின் தீதா றை - காட்சிப் பேற்றை தேடக் கூடியவர்களோடேயாம். இவர்கள் அறிந்து கொள்ள வேண்டியது; இவர்களுடைய இந்த நாட்டம் தேடிய பொருளை ளச் சித்திக்கக்கூடிய காலத்திற்கு முன்பதாகவே கிடைக்க வேண்டுமெனத் தேடுவதாகும். ஆனால், தேட்டப்பொருள் கிடைப்பதை மறுமையில்தான் வைத்திருக்கிறது. அவ்லியாக்கள் இவ் விதமான தேட்டத்தை (எப்பொருளையும் அது சித்திக் கக்கூடிய காலத்திற்கு முன்னாடியே கிடைக்க வேண்டுமெனத் தேடுவதை) வெறுப்பாக நோக்குகிறார்கள். ஏனென்றால் இம்மாதிரியான எண்ணத்தினால் காலத்தை வீணில் போக்குவதைத் தவிர வேறொன்றுமில்லை.*

*துன்யா அரசனின் ஒரு சிறைச்சாலையேயல்லாது, அரசனின் தரிசனையை ஆதரவு வைப்பதற்குரித்தான அரச மாளிகையல்ல. எவனாகிலும் அதில் (அச்சிறைச்சாலையில்) அரசனைத் தரிசிக்க வேண்டுமென நாடுவானாகில் அது அவனது ஒழுங்கீனம், அவமரியாதைத்தன்மை என்றே கருதப்படும். ஒருக்கால் இவ்வீணான வேலையின் காரணத்தினால் அரச மாளிகையிலுங் கூட அரச தரிசனையை இழக்கும் பேறு கெட்டவனாகவும் கூடும். எதுவரை இந்தச் சிறைச் சாலையை விட்டும் பூரண விடுதலையாகவில்லையோ, மவுத்து தபஇியை - இயற்கையான மரணத்தைக் கொண்டு மரணிக்கவில்லையோ அது வரை எப்படி அரச மாளிகையில் பிரவேசிக்க முடியும்? அரச மாளிகையினுள் போகாதவரையில் அரசனை எப்படித் தரிசிக்க முடியும்?*

*அரச மாளிகையிலும் தரிசனம் எல்லோர்களுக்கும் ஒன்று போல சரிசமமாகவும் இருக்காது. ஒவ்வொரு வருக்கும் அவரவரின் பதவிக்குத் தக்கவாறே தரிசனம் கிடைக்கும். கருத்தாவது :- நீங்கள் இந்தத் துன்யாவில் ரியாளத்து, முஜாஹதா - ஜப, தபம் செய்து தெண்டித்து அவனின் மஃரிபாவைப் பெற்று (அவனை அறிந்து) கொள்வீர்களேயானால் அந்த மஃரிபாவுக்குத்தக்கவாறு அவனை மறு மையில் தரிசிப்பீர்கள். அதாவது நீங்கள் இங்கே அவனை அறிந்திருந்த உங்களுடைய ஞான அறிவு அங்கே முஆயனாவாக - காட்சியாக ஆகிவிடும். கியாமத்து நாளில் ஆன்மாவுடைய அழகும், வடிவும் அது உலகில் ஹக்காகிய இறைவனை அறிந்த அதன் அறிவுக்குத் தக்கவாறேயாகும். திரேகத்தின் இலட்சணம் அதன் கிரியைகளுக்குத் தக்கபடி தோன்றும்.*

*நீங்கள் எப்போது மவுத்துத் தபஇியைக் கொண்டு இந்த ஆலமுத்தகல்லுபுவை - கஷ்ட உலகை விட்டும் விடுதலையானீர்களோ அப்போதுதான் நீங்கள் விதைத்த வேளான்மை யின் வருமானம் பெறக்கூடிய வேளையாகும். உங்கள் கிரியைகளின் பலாபலனை அப்போதுதான் கண்டுகொள்வீர்கள்.*

*அறிந்து கொள்ளுங்கள் ! நீங்கள் இந்தப் பாதையில் கால் எடுத்து வைக்க நாடினால் உங்கள் மனதில் அவனல்லாதவைகளுக்குக் கொஞ்சங்கூட இடமில்லாதிருக்கும்போது தான் சாத்தியமாகும். இதற்காக நீங்கள் முதன்முதலி*

ல் உஸ்லத்து - ஒதுங்கியிருப்பது, கல்வத்து - தனித்திருப்பது ஆகிய இவைகளைத் தெரிந்தெடுத்துக்கொள்ளவேண்டும்.

(உஸ்லத்து இரு வகைப்படும்.(1) அன்னியர்கள் அதாவது - இறைவழி நடப்பதற்கு இடையூறு ஆனவர்கள் உடைய சகவாசத்தை விட்டு ஒதுங்கியிருத்தல். இது முரீதீன்களுக்கு - அப்பியாசி களுக்கு அவசியமாகும்.

2. மனதில் அல்லாஹ் அல்லாதவற்றின் ஞாபகம் வருவதை விட்டும் மனம் ஒதுங்கியிருத்தல் இது முஹக்கிகீன் - தேர்ச்சியடைந்த பக்குவிகளுக்குடையதாகும். உஸ்லத்திற்கு ஊன் - தீனைக் குறைப்பதுவும், தூக்கம் மறதியை குறைப்பதுவும் பேச்சுவார்த் தைகளைக் குறைப்பதுவும், திக்றை - இறைதியானத்தை நேமமாக்கி வருவதுவும் அவசியமாகும்.)

எந்த அளவுக்கு சிருஷ்டிகளை விட்டும் தூரப்பட்டி ருக்கிறீர்களோ அந்த அளவுக்கு சிருஷ்டி கர்த்தாவோடு சமீபமாவீர்கள். கல்வத்திற்கு முன்பு உளூ, குளிப்பு, தொழுகை,நோன்பு,மற்றும் பறுளான கடமைகளையும் , இன்னும் அத்தியாவசியமான விதிவிலக்குகளின் சட்டதிட்டங்களையும் நீங்கள் அவசியம் அறிந்திருக்கவேண்டும். இதுதான் அல்லாஹ்வின் பாதையில் நடப்பதற்கு முதல் வாசலாகும். பிற்பாடுதான் அமல் செய்யவேண்டும். அதற்குப் பின் வறஉ - பேணிக்கை ஆகும். (அதாவது ஹறாமைவிட்டும், சந்தேகாஸ்ப் பதமான முஷ்தப ஹாத்துகளை விட்டும் பேணிக் கொள்கிறது.) அப்பால், ஸுஹ்து - வெறுத்திருத்தல் (அதாவது ஹலாலான வஸ்துக்களிலும் தேவையான அளவே அனுபவித்தல். தேவைக்கு மேற்பட்டதை விட்டு விடுதல்.) அப்பால், தவக்குல் (அதாவது அல்லாஹு தஆலாவின் பேரில் நம்பிக்கையோடு இருப்பது.அவசியமான சமயத்தில் ஸபபுகள்-காரணங்கள் இல்லாதபோதும் மனம் பதட்ட மற்றிருப்பதுமாகும்.)

தவக்குல் உடைய முதலாம் படித்தரத்தில் கால் வைத்ததும் உங்களுக்கு நான்கு கறாமாத்துகள் - அபூர்வ காரியங்கள் உண்டாகும். அல்லாஹ் உங்களுக்கு நான்கு சன்மானங் களைக் கொடுப்பான். (1) தண்ணீர் மீது நடத்தல் (2) ஆகாயத்தில் பறக்குதல் (3) பூமியைச் சுருக்கித்தரப்படல்.(4) மறைவான புறத்தால் இரணம் கிடைத்தல். எப்பொழுது இவ்விஷயங்கள் உண்டாயினவோ அப்பொழுது தவக்குல் உடைய முதலாம் படித்தரத்தை கடந்து விட்டோம் என்று அறிந்து கொள்ளுங்கள். அதன் பின்பு ஒன்றன்பின் ஒன்றாய் அஹ்வால் - நிலைகளிலும், மகாமத்து - அந்தஸ்துகளிலும் ஏற்றம் ஆகிக் கொண்டே போகும்.

கல்வத்தில் அமருவதற்கு முன்னால் உங்கள் குவ்வத்து வஹ்மி - சந்தேக புத்தியின் நிலைமையை முதலாவதாகத் தெரிந்து கொள்வது அவசியம். நீங்கள் சந்தேகப்புத்தியு டைவர்களாய் இருப்பீர்க ளேயானால் காமிலான ஷெய்கு - குரு நாதர் இல்லாமல் கல்வத்தில் இருப்பது ஒரு போதும் சரியில்லை. காமிலான ஷெய்கு இல்லாமல் கல்வத்தில் இருப்பீர்களேயானால் பெரும் நஷ்டமடைவீர்கள். ஏனென்றால் சிலசமயங்களில் கல்வத்தில் பயங்கரமான உருவங்கள் தோன்றி பற்பல விதமாகப் பயம் காட்டும். உங்கள் ஷெய்கு உங்களோடிருந்தால் அவைகள் உங்களைப் பயமுறுத்தவிடாமல் காப்பாற்றிக் கொள்வார். நீங்கள் சந்தேகப்புத்தி உடைய மனிதராக இல்

லையானால் இருட்டிலும், வெளிச்சத்திலும், எங்கும் பயமின்றிப்போகவும், மையித்து களோடு கப்ருஸ்தானில் பயமின்றிப் படுத்துத் தூங்கவும் தயாராக இருப்பீர்களேயானால் அப்பொழுது கல்வத்தில் இருக்கலாம். முழுக் கவனத்தையும் அல்லாஹுதஆலாவின் பக்கம் திருப்பி, உங்களை அவன் பக்கம் இழுக்கும்படியும், இருளான திரைகளையும், ஜோதியான திரைகளையும் அகற்றும்படியும் அவனிடம் துஆக்கேளுங்கள்.

கல்வத்துக்கு முற்பட கொஞ்சம் ரியாளத்து - தவ அப்பியாசம் செய்வதும் அவசியம். இந்த ரியாளத்திற்கு குணங்களைச் சீர்படுத்தல் என்று சொல்வார்கள். இந்தச் சீர்படுத்தும் ரியாளத்தை மேற்கொண்டு துற்குணங்களை அகற்றி நற்குணங்களைப் பெற்றுக் கொள்ளாமல் இருந்தால் கல்வத்தினால் பிரயோசனம் பெறுவது கடினமாகும்.

பெயர் பிரபல்யமாவதையும், உங்கள் பேரில் ஜனங்களுக்குப் பற்று ஏற்படுவதையும் ஆதரவு வைத்து கல்வத்திலிருப்பது வீண் வேலை. ஏனெனில், கல்வத்தைக் கொண்டு ஜனங்களுடன் சகவாசம் வைக்காமலும், அவர்களுடைய உருவங்களைப் பார்க்காமலும் இருப்பது கருத்தல்ல. எங்கிலும், ஜனங்களுடைய சிந்தனை மனதில் வராமலும், வீணானதும், பயனற்றதும், துன்யாவினுடைய காரி யங்களைப் பற்றியதுமான வார்த் தைகளைக் காதில் விழாமல் இருப்பதுவுமேயாகும். உண்மையாகக்கேட்பீர்களே யானால், உங்களை விட்டும்கூட நீங்கள் எப்போது தனித்திருப்பீர்களோ, அப்போதுதான் கல்வத்தாகும். இதுதான் உண்மையான கல்வத்து. மற்றவைகளெல்லாம் தவறான கல்வத்துகளாகும். நீங்கள் கல்வத்தினுடைய இந்த நிபந்தனைகளையெல்லாம் சரிவர நிறைவேற்றவில்லையானால் அதாவது :- பற்பல எண்ணங்கள், நாட்டங்களை விட்டும், ஜனங்களுடைய சந்திப்பை விட்டும் உங்கள் வாசலை அடைக்காதிருப்பீர்களேயானால் நீங்கள்மோசம் போய் விட்டீர்கள்; ஹலாக்காகிவிட்டீர்கள் என்று அறிந்து கொள்ளுங்கள்.

ஆகவே, துணிவோடும், வைராக்கியத்தோடும் எல்லா ஜனங்களையும் விட்டும் உங்கள் தன்னையுங் கூட விட்டும் ஒரே மூச்சாக நீங்கிவிடுங்கள். அல்லாஹுதஆலாவினுடைய நாமங்களில் நின்றும் விரும்பியதைக் கொண்டு திக்ரில் பராக்காகுங்கள். என்னிடத்தில் எல்லாத் திக்ருகளிலும் விஷேசமானதும், மேலானதும், உயர்வானது மாகிறது அல்லாஹ் என்ற இஸ்முல் அஃளம் ஆக இருக்கும். இதை மனத்தாலும், வாயாலும் சொல்லிக்கொண்டே இருங்கள். இதற்குமேல் ஒரு அட்சரத்தைக் கூட அதிகப்படுத்தாதீர்கள். மனதில் எந்த எண்ணமும் வரவிடாதீர்கள். கெட்ட எண்ணங்களினால் உங்கள் திக்ரில் வித்தியாசம் ஏற்படாமலும், கல்பு ஹுளூர் - மனம் லயித்தல் ஆவது கெடாமலும் இருக்கவேண்டும். (கல்பு ஹுளூர் ஆவதுதான் மிக முக்கியம். மற்றவையாவும் அதற்கு உதவியேயாகும்.)

எண்ணெய், நெய் பசண்டையுள்ள பதார்த்தங் களைச் சாப்பிடுங்கள். ஆனால் அவை மிருகங்ளுடையனவாயிருத்தலாகாது. (அதாவது - வெண்ணெய், நெய், பால், தயிர், கொழுப்பு வகைகள் கூடாதென்பதாம். எனினும் பாதம் அல்லது வேறு தாவர வஸ்துக்களின் எண்ணெய்களினால் ஆனவையாக இருக்க வேண்டும்.) சோம்பல், சடைவு, தூக்கம் வரக்கூடிய அளவுக்கு வயிறு நிரம்பவும் புசிக்கக்கூடாது; பசியினால் நிம்மதியற்ற நிலையுண்டாகும் அளவு

க்கு ஒரேயடியாகக் குறைத்தும் உணவு அருந்தவும் கூடாது. எப்போதும் நடுநிலைமயாகவே அமைத்துக் கொள்வது அவசியமாகும்.

எண்ணை பசண்டையான உணவை அருந்தவில்லையானால், உஷ்ணமும் ,வரட்சியும் அதிகரித்து கெட்ட சிந்தனைகள் ஏற்பட்டு புத்தியிழந்து உளரக் கூடிய நிலைமை உண்டாகி விடும். இது மிகவும் இகழப்பட்டது. மெய்ஞ்ஞான வழிக்கு தங்கடமானதாகவும் இருக்கக் கூடியதாகும். ஆனால், அவ்வாறின்றி, வாரிது இலாஹி - அல்லாஹ் வின் அருளுடன் கூடிய மெய்ஞ்ஞான வாரித் தொடர்பு மூலம் சுபாவத்தில் மாற்றம் காணப்படுமானால் அது மிகவும் ஏற்றமானதாகும்.

நீங்கள் வாரிதாத்துகளின் விபரங்களையும் அவசியம் அறிந்திருக்க வேண்டும். ஏனெனில், வாரி தாத்து ஷெய்த்தானி யையும் வாரிதாத்து றஹ்மானி என்று கருதி மோசம் போய்விடக் கூடாது. (றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முதலாவதாக வஹீ வந்தபோது கடுமையான குளிராக இருந்தது போல்)வாரிதாத்து றஹ்மானிக்கு திரேகத்தில் குளிர்ச்சியும்,மனதில் பேரானந்தமும் ஏற்படும். எவ்விதமான துக்கமும் வராது. உருவமோ, முகவடிவமோ பேதலிக்காது. இன்னும், அது வந்துபோகும் போது அறிவை ஈந்து விட்டுச் செல்லும். இதற்கு மாற்றமாக வாரிது ஷைத்தானி வரும்போது உடம்பிலும், உறுப்பிலும், நடுக்கமும், எரிவும் ஒருவகையான கஷ்டமும் உண்டாகும். உருவமும் பேதலிக்கும். புலன்களில் மந்தமும் ஏற்படும். ஆகையால் நீங்கள் இத்தகைய ஷைத்தானியத்தான வாரிதாத்துகளை விட்டும் உங்களை பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

இம்மாதிரியான வாரிது வந்ததானால் அதன்பக்கம் முகம் நோக்கி கவனத்தை செலுத்தலாகாது. மனமொருமித்து உங்கள் திக்ரிலேயே பராக்காகி இருக்க வேண்டும். (அதாவது வாரிதாத்தைப் பற்றிய நினைப்புச் சிந்தனையும் கூட மனதில் வராத அளவுக்கு முழுமூச்சாக திக்ரில் மூழ்கிவிடுங்கள்.) ஏனென்றால் அந்த வாரிதாத்து உங்கள் பேரில் அடர்ந்தேறாது மேலாலேயே போவதற்காக.

(என்னுடைய அடியான் என்னை திக்ரு செய்யும்போது நான் அவனுடனேயே இருக்கிறேன். என்று ஹதீது குத்ஸியில் வந்திருக்கிறது. எவனோடு அல்லாஹ் இருக்கிறானோ அவனிடம் ஷைத்தான் வருவதற்கு சக்தி பெறமாட்டான். இன்னும் உங்களுடைய மனதில் ஏதாவது மார்க்க விரோதமான செயல் பற்றிய ஊசாட்டம் வருமேயானால், அது வாரிதாத்து ஷைத்தானியென்றும், மார்க்கத்தில் ஆகுமாக்கப்பட்ட கருத்தைப் பற்றிய ஊசாட்டம் வந்தால் அது வாரிதாத்து நப்ஸானி என்றும் உணருங்கள். ஷைத்தானிய்யத்தான வாரிதாத்து பிரகாரம் அமல் செய்யவேகூடாது. நப்ஸானியத்தின் பிரகாரம்அவசியம் ஏற்பட்டால் மாத்திரம் செய்யுங்கள்.)

வாரிதாத்துகள் வந்தால் அது என்னவென்று கவனிக்கக் கூடாது. (ஏனென்றால், அவ்வாறு அதில் கவனிப்பதானது,அதன்பக்கம் முகம் நோக்குவதாகும். உங்களுக்கு உங்கள் மனம் ஹக்குதஆலாவின்பக்கம் கவனம் செலுத்துவதை தவிர்த்து வேறொன்றின் பக்கமும் கவனம் செலுத்தாதிருப்பது அவசியம்.)

*ஆகையால் நீங்கள் இரு விஷயங்களின் பேரில் உறுதியாக முடிவு செய்து கொள்ள வேண்டும்.*

*(1) ஏதாவது வாரித் உங்களிடம் வந்து நான் ஆண்டவன் என்று சொல்லுமேயானால் அதற்கு மறுமொழியாக ஸுப்ஹானல்லாஹ் - அல்லாஹ் தூயவன்,ஆமந்து பில்லாஹ் -நான் அல்லாஹ்வைக் கொண்டு விசுவாசம் கொண்டுள்ளேன் என்று சொல்லுங்கள்.*

*(அல்லாஹுதஆலாவின் ஹுவியத்து எல்லா மவ்ஜூதாத்து -சிருஷ்டிகளிலும் ஊடுருவி வியாபித் திருக்கிறது. அவன் எல்லாச் சிருஷ்டிகளிலும் ஒரேவிதமாகக் காட்சியளிக்கின்றான். இதைக் கொண்டு அந்த சிருஷ்டியிலிருந்து,நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தூர்ஸீனா மலையில் மரத்திலிருந்து நான் அல்லாஹ் என்று சப்தம் கேட்டது போல்,ஓசை நான் அல்லாஹ் என்று கேட்கப்படுகிறது.எல்லாக்கோலங்களும் அவனுடையதே.அவனே எல்லாக் கோலங் களிலும் தஜல்லி - தோற்றம் ஆகிறான். அவனும், அவனுடைய செயல்களுமேயன்றி வேறில்லை என்று நம்புகிறேன். ஆமந்துபில்லாஹ் ஆனால் அவனைப் போல் ஒரு வஸ்துவுமில்லை.அவனுக்கு உருவமில்லை. எந்த உருவத்தி லும் அவன் கட்டுப்பட்டவனுமில்லை. இம்மாதிரி, அம்மாதிரி என்ற கட்டுப்பாட்டிற்கும் அப்பாற்பட்டவன் - ஸுப்ஹானல்லாஹ்!)*

*மேலும், இந்த தஜல்லியில் எந்தத் தோற்றத்தைப் பார்த்தீர்களோ அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். (ஏனெனில், பிற்பாடு சீடர்களை பரிபக்குவப்படுத்தி நடத்தாட்டும் தக்மீல் உடைய மகாம் - நிலையில் இதைக்கொண்டு பயன் அடைவீர்கள்.) ஆனாலும், அதோடு பராக்காகி விடாதீர்கள் .அதன் பக்கம் முகம் நோக்கி விடாதீர்கள்.உங்களுடைய திக்ரைச் செய்து கொண்டே இருங்கள்!*

*(2) இந்த கல்வத்தில் அல்லாஹுதஆலாவிடம் அவனல்லாத எப்பொருளையும் தேடாதீர்கள். எந்தப் பொருளினுடைய ஞாபகத்தையும் மனதில் வைக்காதீர்கள். உங்களிடம் முழு உலகமும் தானாகவே வந்து உதவி செய்தாலும் அதபுடன் - ஒழுக்கத்தைப் பேணி எடுங்கள்.அதன் பக்கம் முகம் நோக்காதீர்கள். அங்கேயே நின்று விடாதீர்கள்.*

*அல்லாஹுத ஆலாவையே உங்கள் அசல் தேட்டமாக வைத்து முன் செல்லுங்கள். இங்கே உங்களுக்கு ஏதொன்றயும் கொடுக்கப்படுமேயானால் அதைக் கொண்டு உங்களை பரிசோதிக்கவேபடுகிறது.நீங்கள் எந்த வஸ்துவுடனே யாகிலும் பராக்காகுவீர்களேயானால் அல்லாஹ் உங்களை விட்டும் தப்பி விடுவான்.அல்லாஹ் உங்களுக்கு கிடைப் பானே யானால் உங்களை விட்டும் ஒரு வஸ்துவும் தப்பிப்போகாது. இவ்விடத்தில் உங்களுக்குக் கொடுக்கப்படுவதெல்லாம் உங்களைச் சோதிக்கப்படுவதற்கேதான் என்பதைநீங்கள் தெரிந்து கொண்ட பின்னர் அதன் விபரத்தையும் சொல்கிறேன் கேளுங்கள் !*

*முதன்முதலாக உங்களுக்கு ஆலமுல் மஹ்ஸூஸாத்து - வெளிப்புலன்களால் கிரகிக்கக் கூடிய உலகம் உடைய திரை அகலும். அதாவது:- வீடு, வாச*

*ல், சுவர், மரம், மலை முதலானவை உங்களுக்குத்திரையாக இருக்கமாட்டா.உங்கள் வீட்டில் இருந்து கொண்டே ஜனங்களை அவரவர்கள் வீடுகளில் என்னென்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்ப்பீர்கள். அவ்வமயம் உங்கள் கட மையாகிறது நீங்கள் எவருடைய அந்தரங் கத்தையும் வெளிப்படுத்தாது இருப்பதாம். அப்படி வெளிப்படுத்துவீர்களாயின் , உங்களை ஷைத்தான் மிகைத்து உங்கள் பேரில் அவன் கைஓங்கி இருக்கிறது என்று உணர்ந்து கொள்ளுங்கள். ஆகவே, அல்லாஹுதஆலாவிடம் நீங்கள் தவ்பாச் செய்து அவனதுஸத்தார் - இரகசியத்தை மறைப்பவன் என்ற ஸிபத்தை-வர்ணிப்பைக் கொண்டு குணமெடுத்துக் கொள்ளுங்கள். இரகசியத்தை வெளிப்படுத் தாதீர்கள்.ஆனால் யாருக்காவது உபதேசம் புரியவேண்டுமென்றால் மறைமுகமாகவும், தனிமை யாகவும் அவனுடைய இரகசியத்தை நீங்கள் கஷ்பு -ஞானவெளிப்பாடு மூலம் தெரிந்திருப்பதாக அவனுக்குச் சொல்லாமல் மற்றப்படி உபதேசம் செய்யுங்கள்.*

*இந்த கஷ்பு இருவிதப்படும் (1) ஹிஸ்ஸி - புலனைச் சார்ந்தது (2) கியாலி - கற்பனையைச் சார்ந்தது. இவையிரண்டுக்கும் வித்தியாசம் தெரிய வழியாவது :-கஷ்பு வரும் போது கண்களை மூடுங்கள். கண்களை மூடிய பின் இந்தக் கஷ்பு இல்லையாயின் அது ஹிஸ்ஸியாகும். (அதாவது வெளிப்புலன்களால் கிரகிக்கக் கூடிய உலகின் திரை நீங்கியதாகும். கஷ்பு கியாலியாகிறது , கியாலியான கண்களினால் உண்டாகிறது.இந்த வெளிரங்கக் கண்களினால்,தென்படக்கூடியவை தென்படாது. கண்களை மூடினாலும் அந்தக் காட்சி தடைப்படாது) கண்களை மூடியபின்பும் இருக்குமேயாயின் அது கியாலியாகும். நீங்கள் கஷ்பு ஹிஸ்ஸியின் பக்கம் திரும்பிப்பாராது உங்கள் திக்ரிலேயே பராக்காகி இருப்பீர் களேயானால்,சீக்கிரம் கஷ்பு கியாலி உண்டாகும்.அந்தக் கஷ்பில் உங்கள் பேரில் அக்கிலிய்யத்தான மஆனி - யுக்தி பிரமாணக்கருத்துகள் எல்லாம் இறங்கும். இந்த இடம் மிகவும் கடினமாக இருக்கும். நபிமார்கள், குறிப்பிட்ட அவ்லியாக்களைத் தவிர வேறு யாரும் இதன் இரகசியங்களை அறிய மாட்டார்கள்.*

*(முதன் முதலாக ஸாலிக்கின் பேரில் புலன்களால் கிரகிக்கக்கூடிய ஆலமுல் மஹ்ஸூஸாத்து என்ற உலகத்தின் திரை நீங்கும். அப்பால்,கியால் உடைய உலகமாகிய ஆலமுல் மிதாலின் திரை நீங்கும். பின்னால், அற்வாஹ் உடைய ஆலம் வெளியாகும். பின்னால், ஹக்குதஆலாவின் ஸிபாத்துடைய ஆலம் வெளியாகும்.)*

*ஆகையால், நீங்கள் கஷ்புகியாலியின் பக்கமும் கவனத்தைச் செலுத்தாது திக்ரு செய்வதிலேயே கருத்தாயிருங்கள். உங்களுக்கு இந்தக் கட்டத்தில் தண்ணீர், தேன் அல்லது கள் கொடுக்கப்பட்டால் கள்ளை ஒரு போதும் குடிக்காதீர்கள். ஆனால் அது மழைத்தண்ணீரோடு சேர்ந்திருப்பது தெரியவந்தாலே ஒழிய ( ஏனென்றால் கள்ளைக் கொண்டு இல்முல் அஹ்வால் - நிலைமைகளைப்பற்றிய ஞானம் என்று கருத்தாகும். அது மழைத்தண்ணீரோடு சேர்க்கப் பட்டதாக இருந்தால் இல்முல்வஹ்பி - கடாட்ச ஞானம் என்று கருத்தாகும்.) அது, ஊற்றுத் தண்ணீரோடு சேர்க்கப்பட்டதாக இருந்தால் ஒரு போதும் குடிக்காதீர்கள். (ஏனெனில், அது இல்முத்தபயீ - இயற்கையை பற்றிய ஞானம் என்பதாகும். அது மிகுந்த ஜனங்களை வழிகேட்டிலாக்கிவிட்டது) குளத்துத் தண்ணீரோடு சேர்க்கப்பட்டதாக இருந்தாலும்*

குடிக்காதீர்கள். (ஏனெனில், அது இல்முல் பிக்ரு - சிந்தனையைக் கொண்ட அறிவு என்பதாகும்.) ஆனால், சுத்தமான தண்ணீராக இருந்தால் அவசியம் குடியுங்கள்.(ஏனெனில்,அது இல்முல் முத்லக்கு - பொதுப்படை அறிவு என் பதாகும்.)

சுத்தமான பாலாக இருந்தால் அது மிகவும் நல்லது. ஏனெனில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃறாஜுடைய இரவில் பாலைக் குடித்தார்கள். பால் (கொண்டும்) இல்முல் முத்லக்கு என்று கருத்தாகும். அதற்குப்பின்னாலும், நீங்கள் உங்கள் திக்ரிலேயே பராக்காகிக் கொண்டிருங்கள் கஷ்பு கியாலியாகிய ஆலமுல் மிதாலின் கஷ்பும் போய் ஆலமுல் அற்வாஹ் உடைய கஷ்பும் உண்டாகி ஆலமுல் அக்லியில் போய்ச் சேருவீர்கள். பின்னர் உங்களுடைய சரீரக்குறிப்புகளை விட்டும் நீங்கியது போல் உங்கள் றூஹின் குறிப்பை (தன்னுடைய றூஹ் என்ற குறிப்பை)விட்டும் கூட நீங்கிவிடுங்கள். இங்கு உங்களுக்கு தஜல்லியே ஸிபாத்து - ஹக்குத ஆலாவின் ஸிபாத்தின் தோற்றம் முஷாஹதா -காட்சி நிலையில் அல்லது தூக்கத்தில் உண்டாகும்.(தூக்கத்திலும்-முஷாஹதாவிலும் புலனறிவு போய் விடும். நானென்ற உணர்வும் இருப்பதில்லை. இதனாலேயே தூங்குகிறவனும் தன் கனவில் கண்காட்சியாகப் பார்ப்பதாகவே உணருகிறான்.)

இவையிரண்டிற்கும் வித்தியாசமாவது:- முஷாஹாதாவுக்குப் பின் ஆனந்தம் உண்டாகும். தூக்கத்திற்குப் பின்பு கவலையைத் தவிர வேறொன்றும் இராது. (ஏனென்றால் தூக்கத்தில் செல்லக்கூடியநேரங்களெல்லாம் மறதியிலே வீணாகப் போகிறது.இதனா லேயே கவலைப் படுவதும்,பிழைபொறுக்கத்தேடுவதும் அவசியம்.)

இவ்விடத்தில், நீங்கள் ஹக்குதஆலாவின் சமூகத்தில் ஹாஜராவதற்குத் தகுதியானவர்தானா அல்லவா என்பதற்காக மேலும் உங்களைச் சோதிக்கப்படும். அதெப்படியென்றால், முதலாவது - உங்களுக்கு ஆலமுல் மஃதனிய்யாத் - உலோகப் பொருட்களின் உலகு உடைய திரை நீங்கும். கற்கரடுகளின் இரகசிய தத்துவ அமைப்பு உங்களுக்குத் தெரியவரும். நீங்கள் அதிலேயே பராக்காகிவிடக் கூடாது. அவ்வாறு பராக்காகுவீர்களேயானால் அல்லாஹ்வின் வாசலைவிட்டும் துரத்தப் படுவீர்கள். அத்தோடு சிலகாலத்தில் இந்தக் கஷ்பையும் உங்களைவிட்டும் உரியப்படும். பின்னர் நீங்கள் ஒரு வேலைக்கும் லாயக்காக மாட்டீர்கள்.

இந்தக் கஷ்பில் கவனத்தைச் செலுத்தாமல் உங்கள் திக்ரையே மென்மேலும் அதிகப்படுத்திக் கொண்டே போவீர் களானால் ஆலமுந் நபாத்தாத்து - தாவரப் பொருள்களின் உலகம் உடைய கஷ்பு உண்டாகத் தொடங்கும். ஒவ்வொரு மரம், செடி, புற்பூண்டுகள் உடைய அந்தரங்க - அகமியமும்,அவற்றின் நன்மை தீமைகளும் உங்களுக்குத்தெரியவரும்.ஆனால்,முந்திய கஷ்புகளோடு நடந்தது போல் இதனுடனும் நடக்கவேண்டும். அதாவது, இதன் பக்கம் திரும்பாது திக்ரிலேயே பராக்காகி முன் செல்ல வேண்டும்.

இந்தக் கஷ்பு வெளியாகும் வேளையில் நீங்கள் குழுமையும்,உஷ்ணமும் அல்லாத நடுத்தரமான உணவு அருந்துவது அவசியம்.முந்திய கஷ்பின் காலத்தில் உஷ்ணமான உணவை அருந்த வேண்டும். (ஏனென்றால், ஆலமுல்

ஐமாதாத்து -நிரசவஸ்துகளின் உலகம் வெளியாகும் போது மனிதனுடைய மிஸாஜில் - நாடியில் குளுமையும், வரட்சியும் உண்டாகும். ஆகவே உஷ்ண மான உணவை உட் கொள்ள வேண்டும்.)

இதையும் விட்டு நீங்கள் முன்னால் செல்வீர்களேயானால் ஆலமுல் ஹய வானாத்து - ஜீவவர்க்க உலகம் வெளியாகும். ஒவ்வொரு உயிரினங்களும் ந ாகரீகமான பாஷைகளில் உங்களுக்கு ஸலாம் சொல்லும். இன்னும், அவை வகளின் நிலைகளையும் , தத்துவங்களையும் நீங்கள் அறிவீர்கள். இந்த மூ ன்று உலகங்களின் கஷ்பு தோற்றங்களிலும் நீங்கள் ஒவ்வொரு வஸ்துவினுை டய தஸ்பீஹ்,தஹ்மீது - அல்லாஹ்வைத் துதித்தல், புகழுதல் ஆகியவற்றை கேட்பீர்கள். இவ்விடத்தில் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள் ளுங்கள். ஒவ்வொரு வஸ்துவின் தஸ்பீஹையும் உங்கள் பாஷையில் கேட் பீர்களேயானால் அது கஷ்பு கியாலியாகும். அவைகளின் விகர்ப்பமான பல் வேறு பாஷைகளில் கேட்பீர்களேயானால் அதுதான் சரியானதும், எதார் த்த மானதுமான கஷ்பாகும் என்று உணருங்கள். இந்த மிஃறாஜுக்கு - ஏற் றத்திற்கு தஹ்லீல்-கட்டவிழ்கிறது என்று சொல்லப்படும். அதாவது இந்த ஏ ற்றத்தில் ஸ்தூல நிலை கட்டவிழ்கிறது. அதுவும் வரிசைக்கிரமமாக நீங்குகிற து. இந்த மூன்று ஆலங்களின் வெளிப்பாட்டிலும் உங்களுக்கு கப்ளு - கிட் டுமை ஏற்படுகிறது. ஏனெனில் நீங்கள் இங்கே உங்கள் தாத்துக்குள்ளே அழிகிறீர்கள். இது கிட்டுமையை உண்டாக்கக் கூடியதாகும்.(ஸாலிகு-இறை வழி நடப்பவன் ஆண்டவன் பக்கம் முகநோக்கிச் செல்லும்போது ஸ்தூல உ லகங்களை விட்டும் அலாதியாகின்றான். இதற்கு தஜற்றுது - நீங்குகிறது என்றும் தஹ்லீல் - கட்டவிழ்கிறது என்றும் சொல்வார் கள். இதுவும் வ ரிசைக்கிரமமாக உண்டாகிறது. முதலாவது மண்ணெனும் பூதத்தைவிட்டு ம், அப்பால் தண்ணீர், அதற்கப்பால் காற்று,அதற்கப்பால் நெருப்பைவிட் டும் நீங்குகிறான். இதற்குப் பின்னால் முதல் வானத்திற்குப் போவான் முத ல் வானத்திற்குப் போனதும் அங்கு ஆதம் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவனுக்கு அஸ்மாக்களுடைய இல்மின் பைளை - அருளை கொடுக்கிறார் கள். அங்கே தனது இயல்புக்கு தக்கவாறு அந்த பைளிலிருந்து ஏற்றுக் கொ ள்கிறான். அல்லாஹுதஆலாவின் கிலாபத்து -பிரதிநிதித்துவ பதவியைப்பற் றியும் அதைக் கொண்டு ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஏன் சொந் தமாக்கப் பட்டது என்பதையும் அறிவான்.திரேகங்களின் உற்பத்தி வளர்ச்சி யின் அந்தரங்கமும் வெளியாகும். இந்த வானத்தில் இன்னும் அநேக சங்கதி களையும் அறிவான்.)

பின்னர் உங்களுக்கு ஸரயானு ஆலமுல் ஹயாத்து - எங்கும் பரந்து வியா பித்திருக்கும் ஜீவ உலகம் வெளியாகும். மேலும் ஒவ்வொரு வஸ்துவும் உயி ரோடு இருப்பதற்கான காரணங்களும், ஒவ் வொரு வஸ்துவுக்கும் அதன தன் இயல்புக்குத் தக்கவாறு ஜீவ உலகிலிருந்து எந்தெந்தக் குண பா ட்டைக் கொடுக்கப்படுகிறதோ அதுவும் தெரியவரும். இன்னும், ஜீவன் வ ணக்கங்களிலும் கூட ஊடுருவிப்பாய்ந்தி ருப்பதுவும், அதாவது - இபாதத்து களிலும் கூட ஜீவன் இருப்பதுவும் புலனாகும். (ஸாலிகு இரண்டாவது வா னத்தில் எஹ்யா நபி அலைஹிஸ்ஸலாம், ஈசா நபி அலைஹிஸ்ஸலாம் அவ ர்களது சந்திப்பைப் பெறுவான். இன்னும், ஹயாத்து - சீவன் உடைய இர கசியமும் தெரியவரும். மேலும் , ஆன்மாவும் சீவனும் ஒன்றோடொன்று சே சர்ந்திருப்பதையும் அறிவான். இதே போல் ஹழரத் எஹ்யா அலைஹிஸ்ஸ

லாம் அவர்களும், ஹழரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் ஒருவரை விட் டொருவர் பிரியாமலிருப்பதையும் அறிவான். இந்த கஷ்பில் இல்முஸீமியா - மறைவான விஷயத்தை வெளியாக்குகிறது. இல்முரீமிய்யா - கூடுவிட்டு கூடு பாய்கிறது. இல்முஹீமிய்யா - மற்றவர் கண்ணுக்கு தெரியாது மறைந்து கொள்வது.இல்முகீமிய்யா- இரசவாதம் ஆகியன வெளியாகும். மேலும் அநேக காரியங்களைச் செய்யவும்,உண்டாக்கவும் சக்தியேற்படும்.)இங்கும் நீங்கள் தரிபட வில்லையானால், லவாயிஹுல் லௌஹிய்யா - லௌஹுல் மஹ்பூளிலிருந்து தோற்றங்கள் உங்கள் முன் வரும். உங்களோடு பயங்கரமான வார்த்தை களைக் கொண்டு உரையாடப்படும்.

மேலும், உங்கள் பேரில் விதவிதமான ஹாலாத்து - நிலைமைகள் வெளியாகும். (மண்,தண்ணீர், எவ்விதம் காற்று நெருப்பாகவும், காற்று ; நெருப்பு எவ்விதம் மண் தண்ணீராகவும் ஆகிறது என்பது போல்) திண்ணமான பொருள் எப்படி மிருது வாகவும், மிருதுவானது எப்படி திண்ணமாகவும் ஆகிறது என்ற இரகசியமும் மற்றும் அநேக விஷயங்களும்வெளியாகும். நீங்கள் இங்கும் தரிபடாது முன் செல்வீர்களானால் ஒரு நூதன ,ஆச்சரிய,பயங்கரப்பிரகாசம் வெளிப்படும்.நீங்கள் பயத்தினால் அதைவிட்டு ஒளிந்து கொள்ள நாடுவீர்கள். அதைப் பற்றிய பயம் வேண்டாம். அந்தப் பிரகாசம் உங்களிலிருந்தே வெளியாகி இருக்கிறது. அதைக் கொஞ்சமும் இலட்சியம் செய்யாதீர்கள். உங்கள் வேலையை அதாவது - உங்கள் திக்ரிலேயே பராக்காகி - செய்துகொண்டே இருங்கள். உங்களுக்கு எவ்வித கஷ்டமும் வராது.

இதன் பின்பு தௌஹீதுடைய அன்வார் - அத்துவித ஜோதிப்பிரகாசங்கள் உங்களுக்கு வெளியாகும். இதற்கு அன்வாறுத் தவாலிஉ என்று சொல்வார்கள். இங்கும் நீங்கள் தரிபடாமல் முன்னேறுவீர்களாயின்,தர்தீபு குல்லியின் தோற்றம் வெளியாகும். (அதாவது - ஹக்கு, ஹக்குடைய ஸூரத்தில் வெளியாவதாகும். ஏனெனில் மவுஜூதி ஐனி -காணப்பட்ட பொருள்களோ ஹக்கும் கல்கும் சேர்ந்ததுவன்றோ இதனாலேயே இந்த கஷ்பு, கஷ்பு அன்வாறு தவாலிஉ உண்டான பிற்பாடு உண்டாகிறது.)மேலும் சிறப்பும், வலுப்பமும் உடைய அல்லாஹுதஆலாவின் சமூகத்தில் புகுதுவதுடையவும், அவன் சமூகத்தில் தரிபடு வதுடையவும் ஆதாபு - ஒழுக்கங்கள் தெரிய வரும். பின்னர் அங்கிருந்து சிருஷ்டிகளின் பக்கம் வரக்கூடிய வழியையும் தெரிவிக்கப்படும். இன்னும், வெளிரங்கமான, உள்ரங்கமான பற்பல விதற்பமான விதங்களிலெல்லாம் அவனைச் சதாவும் முஷாஹதா - தரிசனை செய்வதையும் அறிவீர்கள். மேலும், வேறெவருமே உணர்ந்து கொள்ளா பூரணத்து வத்தையும் அறிவீர்கள். ( எந்த மர்தபா விலானாலும் சரியே அதில் பூரணத்துவத்தில் குறைபாடு ஏற்படாது.) ஏனென்றால், வெளிரங்கத்தின் விதங்களில் ஏதும் குறைவு ஏற்பட்டால் அந்தரங்கத்தின் விதங்களிலிருந்து அதை தப்பூர்த்தி செய்யப்பட்டு விடும். மேலும் (தாத்தை ஒன்றைக் கவனித்து உள்ளானது என்றும் மற்றொன்றைக் கவனித்து வெளியானது என்றும் வர்ணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த) தாத்தில் எவ்விதமான குறைபாடுமில்லை.( எது வெளிரங்கத்தில் அவருக்கு தப்பிப்போகிறதோ அது அவருக்கு அந்தரங்கத்தில் தப்பிப் போவதில்லை. எது அந்தரங்கத்தில் தப்பிப் போகிறதோ அது வெளிரங்கத்தில் இருக்கிறது. கருத்தாவது தாத்து எப்போதும் சம்பூரணமாகவே இருக்கிறது. அதில் எவ்வித குறைபாடும் இல்லை. சந்திரனைப் பாருங்கள்! அது எப்போதும் பூரண சந்திரனாகவும் இருக்கிறது. மறைந்ததாக

*வும் இருக்கிறது. முதல் நாள் பிறையாகவும் இரண்டாம் நாள் பிறையாகவும் இருக்கிறது.அதாவது - இந்த எல்லா நிலைகளும் சந்திரனில் இருப்பதோடு அது எப்படி இருந்ததோ அப்படியேதான் இருக்கிறது. அதனுடைய நிலையில் மாறுதலோ, பேதமோ இல்லை. இந்தப் பேதங்களெல்லாம் அதை நம்மளவில் சேர்த்துப்பார்ப்பது கொண்டே தான் இருக்கிறது. இன்று அது ஓரிடத்தில் பதினான்காம் நாள் முழுப்பிறையாகவும், இன்னோரிடத்தில் இருபத் தெட்டு அமாவாசையாகவும், மற்றோரிடத்தில் முதல் நாள் இளம் பிறையாகவும் இருக்கிறது. இதேபோல் ஹக்குதஆலாவும் பாத்தின் அந்தரங்கம் ஆக இருப்பதையும் ளாஹிர் - வெளிரங்கம் ஆக இருப்பதையும் கவனிக்கவும்.அவனில் எவ்விதமான குறைகளுமில்லை.)பின்னர் உங்களுக்கு உலூமுஇலாஹிய்யா - தெய்வீக ஞானம் அருளப்படும். (இது கிடைக்கும் போது ஸாலிக்குடைய கவனம் இல்மின் பக்கமும், ஹக்கின் பக்கமும் இருப்பதற்காக அந்த இல்முகளை ஹக்குத ஆலாவின் மள்ஹர் - தோற்றம் என்பதாக உணரவேண்டும்.)*

*இந்த ஞானத்தைக் கொடுக்கப்படக்கூடியவர்களில் இதற்கு அவரில் தகுதி உண்டாகிற விதத்தையும் அறிவீர்கள். கப்ளு, பஸ்து - கிட்டுமை, விசாலம் உடைய ஒழுங்குகளையும் அறிவிக்கப்படும். (கப்ளில் அல்லாஹ்வின் ஜமாலிய்யத்தான ஸிபத்தின் பக்கமும்/ பஸ்தில் ஜலாலிய்யத்தின் பக்கமும் அல்லது மாற்றமாகவும் கவனத்தைச் செலுத்தலாம். ) இன்னும்,கல்பை-இருதயத்தை, கரிந்து போகாமலும், மாண்டு போகாமலும் எப்படிக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற அறிவும் உண்டாகும். (பற்பல அஹ்வால்களும் வரும் இடமாகிய கல்பில் அல்லாஹ் உடைய ஷுஹூது நிலைத்திருப்பதற்காக அதை காரணங்கள், இன்னும் அல்லாஹ் அல்லாத மற்றவை பக்கம் செலுத்தாமல் எப்படிக் காப்பாற்றலாம் என்ற ஒழுக்கங்கள் பற்றியும் அறிவிக்கப்படும்.) இன்னும், எல்லாப் பாதைகளும் ஒரே வட்ட வடிவமாகவே தோன்றும். ஒரு பாதையாவது வேறுவிதமாக இராது.(இங்கு ஒரு பாதை நேரானதாவும்,ஒரு பாதை கோண லானதாகவும் இல்லாமல் எல்லாமும் நேரானதாகவும் ஆரம்பிக்கப்பட்ட இடத்திற்கே வந்து முடியக் கூடியதாகவும் இருக்கும்.)இங்கும் நீங்கள் தரிபடாது போவீர்களானால் சுத்தமான உலூமுன்னள்ரிய்யா பிக்ரிய்யா - சிந்தனை ஆராய்ச்சி ஆன மர்தபாக்களில் இருந்து நபி ஈஸா அலைஹிஸ்லாம் அவர்களது எதார்த்தம் உங்களுக்கு வெளியாகும் .நீங்கள் சிந் தனை ஆராய்ச்சியாளர்களில் எதார்த்தத்தில் மேலானவர் யார்? தாழ்ந்தவர் யார்? என்பதனை அறிவீர்கள்.மேலும், அவர்களின் விளக்கம் எதனால் பிசகிப் போயிற்று என்ற அந்தரங்கத்தையும், புத்திக்கும் அனுமானத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தையும் அறிவீர்கள். (இவ்விரண்டிற்கும்இடையே வித்தியாசம் கண்டுபிடிப்பது சிலசமயம் பெரும்பெரும் அறிவாளிகளாலும் முடியாம லாகிவிடும்.)*

*இன்னும் ஆலமுல் அற்வாஹுக்கும் ஆலமுல் அஜ்ஸாமுக்கும் - ஆன்ம உலகுக்கும் ஸ்தூல உலகுக் கும் இடையில் உண்டான சிருஷ்டிகளை, அதை எப்படி உண்டாக்கப்பட்டது என்ற அந்தரங்கத் தையும் (நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஸ்தூல உலகைச் சார்ந்த மரியம் அலைஹஸ்ஸலாம் அவர்களுக்கும், ஆன்ம உலகைச் சேர்ந்த ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும் இடையிலும், நப்ஸை ஸ்தூல சடலத்திற்கும், ஆன்மா வுக்குமிடையிலும் படைத்தது போல்) இன்னும்; ஆலமுஸ்ஸிபாத்து - லட்சண உலகுக்கு*

ள் தாத்தின் இரகசியத்தையும் அறிவீர்கள்.(அதாவது : ஆலமுஸ்ஸிபாத்தில் வஹ்தத்து தாத்தியையும், ஆலமுல் அஜ்ஸாமில் வஹ்தத்து அக்லியையும், இன்னும் வஹ்தத்து அர்ஷியையும் - ஆலமுஸ்ஸிபாதில் தாத்து வியாபித்திருப் பதையும், தூல உலகில் அக்லும் அற்ஷும் வியாபித்திருப் பதையும் அறிவீர்கள்.) இவைகளல்லாமல் இன்னும் அநேக விஷயங்களும் தெரியவரும். அவற்றை இங்கு விபரித்தால் நீளும்.

நீங்கள் இங்கும் தரிபடாமல் முன்னேறிச் செல்வீர்களானால் ஆலமுத்தஸ்வீர், ஹுஸ்னு ஜமாலு - உருவங்கள் அமைப்பு, அழகுவடிவத்துடைய உலகம் உங்களுக்கு வெளியாகும்.( இது மூன்றாவது வானம். இங்கு யூசுப் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் விருந்தினர் ஆக ஆவீர்கள். உங்களுக்கு அவர்களிலிருந்து பைளு கிடைக்கும்.) ஒவ்வொரு வஸ்துவுக்கும் இன்னின்ன உருவமும், நடையும், என்ன காரணத்திற்காக உண்டானது என்பதையும் அறிவீர்கள். இவ்விடத்திலிருந்து தான் புலவர்களுக்கு உதவி கிடைக்கிறது.(ஏனெனில்,புலவர்கள் சிந்தனையாளர்களாகவும், உதிப்புடையவர்களாவிகவும் ஆவார்கள். அவர்களுக்கு அழகு வடிவத் தோடு நெருங்கிய தொடர்பு உண்டு.)

நீங்கள் இங்கும் தரிபடாமல் முன்னேறுவீர்களாயின் குத்பியத்தின் மகாமுக்கு உயர்த்தப் படுவீர்கள்.இதற்கு முன்பு நீங்கள் பார்த்தவைகளெல்லாம் குத்பின் இடது பாகமாகும்.(இடது பாகமென்பதுகுத்பு எந்தப்பக்கத்திலிருந்து அற்வாஹ் உடைய ஆலம்களுக்கு பைளை - அருளை கொடுத்து ஆட்சி செய்கிறாறோ அந்தப் பாகமாகும்.) இப்போது வந்திருக்கும் இடமானது குத்புடைய கல்பு - நடு மத்தி அதாவது, குத்புடைய ஸ்தானமாகும். இதற்கு முன்னாலே குத்புடைய வலப்பக்க உலகம் இருக்கிறது. (அதாவது :- உங்களுக்கு எதனுள் குத்பிய்யத்துடைய மர்த்தபா வெளியானதோ அது கல்பாகும் - நடுமத்திபமாகும். அதாவது நான்காவது வானமாகும். மூன்று வானங்களும், பூதங்களும் இதற்கு கீழே இருக்கின்றன. அவைகளுக்கு ஆலமுல் யஸார் - இடது உலகம் எனச் சொல்லப்படும். இன்னும், மூன்று வானங்களும், குர்ஸியும் அர்ஷும் இதற்கு மேலே இருக்கிறது. அவைகளுக்கு ஆலமுல் யமீன் - வலது உலகம் எனப்படும். குத்பிய்யத்துடைய மர்த்தபா இத்ரீஸ் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் சம்பந்தப்பட்டது.ஸாலிக்கு இங்கு வந்து அவர்களுடைய விருந்தாளியாகிறான். அவர்களிடம் பைளு பெறுவான்.) இந்த குத்புடைய ஆலம் உங்களுக்கு வெளியானதும் இண்இகாஸாது - பிரதிபலித்தல் உடைய அந்தரங்கங்களும் நேமமாக இருக்கிற பொருள் எப்படி நேமமாக இருக்கிறது என்பதும் எல்லாச் சிருஷ்டிகளிலும் உஜூது - உள்ளமை எப்படி ஊடுருவிப் பாய்ந்திருக்கிறது என்பதும் உங்களுக்கு வெளியாகும்.இன்னும்(ஆலங்களை உண்டாக்குகிறது, அவைகளை நிலைபாடாக்கி வைத்திருப்பது, அவைகளை வரிசைக்கிரமமாக உண்டாக்குவது சம்பந்தமான) அல்லாஹுதஆலாவின் ஹிக்மத்துகளையும், அதைக் காப்பற்றிக் கொள்ளக்கூடிய சக்தியையும் உங்களுக்கு கொடுக்கப் படும்.

மேலும் இந்த அமானிதத்தை அதற்குத் தகுதியானவர்களிடம் கொடுக்கும் படியாகவும், உங்களிடம் சொல்லப்படும். இன்னும், றம்ஸு - குறிப்பு, இாரா - சயிக்கினை, ஸத்று -மறைக்குதல், கஷ்பு - வெளியாக்கல், உடைய சக்தியும் உங்களுக்கு கிடைக்கும்.

*(அதாவது :- றூஹானிய்யத்துடைய இரகசியங்களும், ஒளி, பிரகாசம், மின்னல், சுடர் இவைகளெல்லாவற்றினுடைய அறிவும் வெளி யாகும். இன்னும்,விளங்கிக்கொள்ள முடியாத கஷ்டமான அபூர்வ விஷயங்களும் உங்களுக்கு வெளியாக்கித் தரப்படும்.) இங்கும் நீங்கள் தரிபடாமல் முன்னேறுவீர்களானால், அப்பால் ஹமிய்யது - அபிமானம், சினம், பிடிவாதம், சத்தியம், அசத்தியம், பகைமை,அன்பு முதலியன உலகில் உண்டாவதற்குரிய காரணங்களும் (மிருகங்களை அறுக்கிறது. அவைகளை குர்பானி கொடுப்பது இவற்றின் இரகசியங்களும்) விளங்கவரும். கஹ்ஹார்- அடக்கியாளு பவன் என்ற இஸ்முடைய தஜல்லியும் உண்டாகும். இன்னும் முன்னேறி மேலே போவீர்களானால் கீறத்து - ரோத்துடைய ஆலம் வெளியாகும். அல்லாஹுதஆலா உங்களுக்கு பூரணமாக வெளியாவான். ஆலமுல் அர்வாஹிலி ருந்து ஒரு ஆலம் வெகு அழகிய வடிவுடன் உங்கள் முன்னால் வரும். (ஏனென்றால் இது அருட்கொடையான மஃரிபாவாகும். சிந்தனையால் அறியப்பட்டது அல்ல. சிந்தனையால் அறியப்பட்டது மஃரிபாவுக்கு பின்னமும் குறைவுமாகும்.கடாட்சத்தைக் கொண்டு அறியப்பட்டது மஃரிபாவுக்கு அழகும் அம்சமுமாகும்.)*

*இது வரை எந்தெந்த ஆலங்களெல்லாம் வெளியாகும் என்பதாக சொல்லப்பட்டு வந்ததோ அவைகளெல்லாம் அளவில்லா மரியாதையோடும், கனதியோடும், வாஞ்சையோடும் உங்களிடம் வரும். எப்படியாவது உங்களை மயக்கி அவற்றின் பக்கம் உங்களைத் திருப்ப பிரயத்தனங்கள் செய்யும். நீங்கள் அதன் பக்கம் முகநோக்கிப் பார்க்கவே கூடாது.(ஏனென்றால், இந்த எல்லா வெளிபாடுகளும் உங்களைப் பரீட்சிப்பதற்காகவே அல்லாஹ் விடமிருந்து வந்தவையாகும். அதாவது நீங்கள் அல்லாஹ் அல்லாதவைகளின் பக்கம் கவனத்தை திருப்புகிறீர்களா அல்லவா எனப் பரிசோதனை செய்வதற்கே. அவன் அல்லாதவற்றின் பக்கம் கவனத்தைத் திருப்புவீர்களேயானால், நீங்கள் அவனுடைய சமூகத்தில் ஹாஜராவதற்கு தகுதியற்றவர்களாவீர்கள்.) ஏனென்றால் நீங்கள் அத்துடன் மேலே முன்னேறுவதற்கு தடையுண்டாகி கீழே இறங்குவது ஆரம்பமாகிவிடும். நீங்கள் இன்னும் மேலே செல்வீர்களேயானால் கண்ணியம், சாந்தி, ஸ்திரம், உபாயம், இவைகளுடைய இரகசியங்களும் வெளியாகும்.(ஏமாற்று, மோசடி, வேலைகளுக்குக் காரணங்களையும் அவைகளை விட்டுத்தப்பிக் கொள்ளும் விபரங்க ளும் விளங்க வரும்.)*

*இன்னும் மேலே போவீர்களேயானால், ஜபரூத்துடைய ஆலம் அதாவது அமல்கள் பதிவு செய்யப்படும் ஏடு -தப்தர் ஆகிய ஆலம் வெளியாகும்.இதற்கு இல்லிய்யூன் என்றும் சொல்வார்கள்.இங்கே சுவர்க்கவாதிகளை பார்ப்பதும் தவிர அவர்களது பதவிகளின் வித்தியாசமும் தெரியவரும். பின்பு நரகத்தையும் அங்கு வேதனை செய்யப்படும் வகை விபரங் களையும் தெரிவீர்கள். சுவர்க்கம், நரகம் ஆகியவற்றினுள்ளே போகிறவர்கள், அவர்கள் அங்கு போவதற்குக் காரணமான கிரியைகளின் அந்தரங்கங்கள் முதலியன தெரியவரும்.*

*(சுவர்க்கமும், நரகமும் புலன்களால் கிரகிக்கக் கூடிய இரண்டு ஸ்தானங்களாகும். அவைகளில் ஒன்றில் புலன்களால் கிரகித்து உணரக்கூடிய உயர்தரமான சுகங்களும்,மற்றதில் புலன்களால் கிரகித்து அனுபவிக்கக்கூடிய கொ*

டிய வேதனைகளும் உண்டு என்ற ஸுன்னத்து வல் ஜமாஅத்தாரின் கொள்கையைப் போன்றே ஷைகுல் அக்பர் (குத்திஸ ஸிற்றுஹு) அவர்களும் சொல் கிறார்கள். ஆனால் ஹுகமாவுல் இஷ்றாகீன்களில் சிலர் இவை இரண்டும் கியாலி -கற்பனையானது. அவைகளிலுண்டான சுகம், வேதனை கற்பனை யானவை என்று சொல்கிறார்கள்.)

இன்னும் மேலே போவீர்களானால், ஜபரூத்துடைய ஆலத்தில் ஹக்குத ஆலாவின் பேரழகின் தரிசனையிலேயே மூழ்கி மயங்கிக் கிடக்கும் பரிசுத்த ஆன்மாக்கள் தரிசன மாகும். அவர்களது ஆசையையும், ஆனந்தத்தையும் கண்டு நீங்களும் அவர்களைப் போலாக வேண்டுமென்று உங்கள் மனம் ஆசைப்படும். நீங்கள் அதையும் விட்டு மேலே செல்வீர்களானால் வஹ்தத்துடைய நூர் உங்களுக்கு வெளியாகும். அதில் உங்களுக்கு உங்களைத் தவிர வேறொன்றும் தென்படாது.

முன்பொருபோதும் ஏற்பட்டிராத அபரிமித மான ஆனந்தமும், சுகமும் உண்டாகும். இதற்கு முன்பு கண்டவைகள் அத்தனையும் இதனோடு ஒப்பிட்டுப்பார்க்க அவை அற்பமாகவும், மோஷ மாகவும் விளங்கும். மேலும், உங்களை ஆகாயத்தில் அந்தரமாக ஜொலித்துப் பிரகாசிக்கும் தீபம் போலவும் பார்ப்பீர்கள். (இவ்விடம் சறுகக்கூடிய இடமாகும். இங்கு ஸாலிக்கு போனதும் அவனுக்கு வஹ்தத்துடைய மகாம் தோற்றமாகும். அவனுக்கு நாம்அஹதிய்யத்துடைய மகாமில் சேர்ந்து விட்டோம். தாத்தின் தஜல்லி உண்டாகிவிட்டது என்று சந்தேகம் எழும்பும். ஆகையால் இங்கும் நீங்கள் மயங்கி தரிப்பட்டுவிடக் கூடாது.) அங்கிருந்து மேலே செல்வீர்களேயானால் மனிதர்களுடைய உருவங்களை குர்ஸிகளில் உட்கார்ந்தவர்களாக பார்ப்பீர்கள்.அவர்களை விட்டும் சில திரைகள் நீக்கப்படவும் , ஸத்தார் என்னும் இஸ்மோடு சம்பந்தப்பட்ட சில திரைகளை அவர்கள் மேல் போடப்படவும் காண்பீர்கள். இன்னும், அந்த உருவங்கள் தஸ்பீஹ் செய்வதையும் கேட்பீர்கள். அதைக் கேட்டு பயப்படாதீர்கள். அந்த ஸூறத்துக்களோடு உங்கள் ஸூறத்தும் நீங்கள் இப்போது இருக்கிற நிலைமைக்குத் தக்கவாறு இருக்கவும் பார்ப்பீர்கள். (அதாவது நீங்கள் பாவம் செய்து அதைவிட்டும் தவ்பாச் செய்யாதிருந்தீர் களேயானால் உங்கள் ஸூறத்து திரையிடப் பட்டதாகவும், பாவம் செய்யாதிருப்பின் திரையில்லா மலானதாகவும் இருக்கும். அந்த ஆன்மாக்களின் தஸ்பீஹானது :- ஸுபுஹானமன் அள்ஹறல் ஜமீல வ ஸதறல் கபீஹ அழகானதை வெளியாக்கி அவலட்சணமானதை மறைத்திட் டானே அந்த நாயன் பரிசுத்தமானவன் என்பதாம்).

இன்னும் மேலே செல்வீர்களேயானால், றஹ்மானிய்யத்துடைய ஆலத்தின் இரகசியங்கள் வெளியாகும். எதைப் பார்த்தாலும் இதற்கு முன்பார்த்தவைகளெல்லாம் இதில் இருக்கவும் காண்பீர்கள். உங்கள் தாத்தின்அந்தஸ்தையும்,அதன் மர்த்தபாக்களையும் மற்றவைகளையும் பார்ப்பீர்கள்.மேலும் தெய்வீக அஸ்மாக்களிலிருந்து எந்த இஸ்முடன் உங்களுடைய தொடர்பு இருக்கிற தென்பதையும், விலாயத்திலும் அல்லாஹ்வின் மஃரிபத்திலும், உங்களுடைய மகாம் எது என்பதையும் அறிவீர்கள்.

இன்னும் மேலே செல்வீர்களானால் அக்லுல் அவ்வல் உடைய ஆலத்தில் சேர்வீர்கள். இதுதான் எல்லா வஸ்துக்களுக்கும் குருவாகும். எல்லா உலகங்களிலும் நீங்கள் இதன் குணபாட்டைத்தான் பார்த்தீர்கள். இதன் தொகுப்புதான் நூன் உடைய ஆலத்தில் நின்றும் லௌஹுல் மஹ்பூளில் வகுப்பாக இருக்கிறது.(அக்லுல் அவ்வலில் எல்லா ஆலங்களும் அவைகளிலுள்ளவைகளும் தொகுப்பாக - பொதுப் படையாக இருப்பதைக் கவனித்து அக்லுல் அவ்வலுக்கு நூன் என்றும், அது எல்லா வஸ்துக்களையும் லௌஹுல்மஹ்பூளில் வகுப்பாக - விவரமாக ஆக்குவதனால் அந்த அக்லுல் அவ்வலுக்கு கலம் என்றும் சொல்கிறார்கள்.)

இன்னும் முன் செல்வீர்களேயானால், ஸிபத்து முஹர்ரிகா - சர்வலோகங்களையும் ஆட்டி அசைக்கும் தத்துவம் வெளியாகும். அதற்கு மேலே வஹ்தத்து தாத்தி - எங்கும் வியாபித்திருக்கும் பிரம்மம் வெளியாகும். நீங்கள் அடியோடு அழிந்து மறைந்துவிடுவீர்கள். பின்னர் நீங்கள் அடியோடு அறியப்படாதுமறக்கப்பட்ட வஸ்துவாக்கப்பட்டுவிடுவீர்கள்.எது வரையிலுமானால்,எப்பொழுதாகிலும் அழிக்கிறவனுடைய குணபாடு உங்களுக்குள்ளாலே எஞ்சியிருக்குமேயானால் அதோடு நீங்களும் நிலைத்துவிடுவீர்கள். பின்னர், உங்களை முன்னால் கொண்டுவரப்படும். நீங்கள் தரிபாடானவராய் ஆகிவிடுவீர்கள். பின்னர் உங்களைச் சேர்க்கப்பட்டு விலாயத்துடைய மர்த்தபாக்களில் ஏதாகிலும் ஒன்றில் நியமிக்கப் படுவீர்கள். அதற்குத்தக்கவாறு உங்களுக்கு சன்மானங்களும், பரிவட்டங்களும் கொடுக்கப்பட்டு உங்களை உங்கள் நாஸூத்து -ஸ்தூல உலகுக்கு அனுப்பப்படுவீர்கள்.

நீங்கள் திரும்பி வரும்போது முன்பு ஏற்றத்தில் பார்த்த எல்லாப் பொருட்களையும் வேறு தோற்றங்களில் பார்ப்பீர்கள். ஒருக்கால் நீங்கள் இந்த ஸ்தூல உலகுக்கு வந்து சேருவீர்கள் அல்லது அங்கேயே மறைந்து தங்குவீர்கள்.(கூறப்பட்ட எல்லா மகாமாத்துக்களும், வெளியாகும் தோற்றங்களும் திட சித்த வைராக்கியம் - ஹிம்மத் உடையவர் களுக்கு பூரணமாகவே வெளியாகும். சிலருக்கு கூடுதல், குறைவாகவும் வெளியாகும்.)

ஒவ்வொரு ஸாலிகும் எந்தெந்த வழியாக நடந்து போவதைத் தெரிந்து கொள்கிறா னோ அந்தந்தப் பாதைக்கு ஏற்றவாறே அவனது முடிவும் ஆகும். (எவனுடைய நாட்டமும், தேட்டமும் உயர்ந்த தாகின்றதோ அவனது மகாமும் உயர் வாகவேயாகும். எவனுடைய நாட்டமும் தேட்டமும் அதற்கு மாற்றமாகுமோ அவனுக்கு இந்தச் சிறப்புகள் கிடைக்காது.)

மேலும், முன் சொன்ன அதே பாதையிலேயே அவனை அழைக்கவும்படும். எந்த நபியவர்களின் பாஷையில் அவனை அழைக்கப்படுகிறதோ அந்த நபியவர்களின் அனந்தரக்காரன். என்று அவனைச் சொல்லப்படும். அதாவது இவன் மூஸவி, ஈஸவி மற்றயவன் ( மூஸா நபியவர்களைச் சார்ந்தவன், ஈஸா நபியவர்களை சார்ந்தவன்,மற்றவர்களைச் சார்ந்தவன்) எனச் சொல்லப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட பாஷைகளால் பேசக்கூடியவர்களும் இருக்கிறார்கள், எல்லாப் பாஷைகளிலும் பேசக்கூடியவர்களே முழுப் பரிபூரணம் அடைந்தவர் - காமில் அக்மல் ஆவார்கள். இவரையே முஹம்மதீ - முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அனந்தரக்காரர் என்று சொல்லப்படும். நீங்கள் இந்த கடைசி மகாமுக்கு போன பின்னர்

உங்கள் அளவில் - ஸ்தூல உலகுக்கு திரும்பி வரவில்லையானால், உங்களுக்கு தங்கிவிட்டவர் - வாகிபு என்று சொல்லப்படும்.திரும்பிவராமல் அங்கேயே-தங்கி தரிபட்டு விடுவீர்களாயின் வஹ்தத்தின் திளைப்பில் சுயமிழந்தவராக - முஸ்தஹ்லகாக அபூ உகைலு மக்ரிபீ றஹிமஹுல்லாஹ், அபூ யஸீதுல் பிஸ்த்தாமீ றஹிமஹுல்லாஹ் இவர்களைப் போன்று ஆவீர்கள்.

(இவர்களுக்கு ஹக்கின் சமூகத்திலிருந்து கிலாபத்தின் பரிவட்டத்தைக் கொடுத்து, நீங்கள் என்னுடைய அடியார்கள் அளவில் போய் அவர்களை நேர்வழி காட்டுங்கள் என்று சொல்லப்பட்டபோது அவர்கள் கீழே விழுந்துவிடவே, ஹக்குதஆலாவின் சமூகத்திலிருந்து மலக்குகளை நோக்கி என்னடியார்களை என்னிடமே விட்டுவிடுங்கள்.அவர்கள் தங்களுடைய தாத்தில் நன்றாய்ச் சம்பூரணம் அடையட்டும் என்று சொல்லப்பட்டது) நீங்கள் இதே மகாமில் மரணம் அடைந்துவிட்டீர்களானால் இந்த மகாமிலேயே உங்களை எழுப்பப்படும்.

நீங்கள் ஜனங்களை நேர்வழி காட்டுவதற்காக திரும்பி விடுவீர்களேயானால் பாதையில் நின்று விட்டவர்களைப் பார்க்கிலும் இதில் மிகவும் வரிசை இருக்கிறது. ஆனால் ஏற்றத்தில் இருவரும் சரிசமமாக இருக்க வேண்டும். பாதையில் தரிபட்டுவிட்ட முஸ்தஹ் லகானவர் ஏற்றத்தில் உயர் பதவி உடையவராகவும் திரும்பி வந்தவர், அவரை விடவும் ஏற்றத்தில் பதவியில் குறைந்தவராகவும் இருந்தால் இவர் அவரை விட வரிசையானவராக முடியாது. ஆனால் இவரும் அவருடைய மகாமிலிருந்தே திரும்பிவந்தவராக இருந்தால் இவர் வரிசை யானவராக ஆவார். மேலும், திரும்பி வருகிற வரை இல்முல் லதுன்னி - கடாட்ச ஞானம் கொடுத்து அனுப்பப்படும்.

திரும்பி வருபவர்கள் இருவகுப்பினராவர். ஒரு வகுப்பினர் தங்கள் தனக்காகவே வருகிறார்கள். இன்னமொரு வகுப்பினர் ஜனங்களுக்காக வேண்டி அனுப்பப்படுகிறார்கள். இவர்கள் ஜனங்களுக்கு நேர்பாதையைக் காட்டி சீரான வழியில் நடத்தி அவர்களை அல்லாஹ் அளவில் அழைப்பார்கள். இப்படி அழைக்கக்கூடியவர்களும் பதவிகளில் பலதரப்பட்டிருக் கிறார்கள். அந்த றஸூல்மார்களில் சிலரைச் சிலரைப் பார்க்கிலும் வரிசையாக்கி வைத்திருக்கின்றோம். என்று அல்லாஹ் திருவுளமா யிருக்கிறான். சிலர் மூஸா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களது வாரிசு - அனந்தரக்காரர் களாகவும், சிலர் ஈஸா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வாரிசுகளாகவும், சிலர் வேறு நபிமார்களின் வாரிசுகளாகவும் இருக்கிறார்கள். இவர்களுக்குத்தான் ஸூபிய்யாக்கள் என்றும், ஹால்களை உடையவர்கள் என்றும் சொல்லப்படும்.சிலர் குறிப்பாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வாரிசுகளாகவும் இருப்பார்கள். இவர்களுக்கு மலாமதிய்யாக்கள் என்றும் தம்கீனை உடையவர்கள் என்றும் சொல்லப்படும்.

அறிந்து கொள்ளுங்கள்!அல்லாஹுதஆலா அளவில் ஜனங்களை அழைக்கக்கூடியவர்கள் எல்லோரும் ஒரே பாதையின் வழியாகவும் அழைக்கமாட்டார்கள். வெவ்வேறு வழிகளாக இருக்கும்.ஒருவர் உபூதிய்யத்தின் ஹகீகத்தில்- அடிமைத்தனத்தின் எதார்த்தத்தில் நாஸ்தியாகிற வாசல் வழியாக அழைத்துச் செல்வார். இது பற்றித்தான், நீர் ஒரு வஸ்துவாகவும் இல்லாதிருந்த நிலைமையில் முன்பு உம்மை படைத்தோம் என்ற திருவசன

த்தில் சயிக்கனை செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் சிலர் அடிமைத்தனத்தைக் கவனிக்கக் கூடிய வழியாக, அதாவது தாழ்மை, வறுமை, தேவை இது போன்ற வாசல்களின் வழியாக அழைப்பார்கள், இன்னும் சிலர் (கிருபை, உள்ளன்பு, பொறுத்தல், மன்னித்தல் இவை போன்ற) அல்லாஹ்வின் றஹ்மத்தின் குணத்தை கவனிக்கிற வழியாகவும், சிலர், (அகங்காரம், உரோஷம், அடக்கியாளும் தன்மை, பகைவர் மீது சீற்றம் இவை போன்ற) அல்லாஹ்வின் கஹ்ரின் குணத்தின் வழியாகவும் அழைப்பார்கள். ஆனால் இவர்களில் எல்லாம் உயர்த்தியான மகாமை உடையவர்கள், அக்லாகுல் இலாஹிய்யாவின்(அதாவது - ஜலால்,ஜமால்-அகங்காரம், சாத்வீகம் ஆகிய இரு குணங்களையும் சேர்ந்த)வழியாக அல்லாஹ் அளவில் அழைக்கின்றவர்களாவர்.

அறிந்து கொள்ளுங்கள்! நுபுவ்வத்தும், விலாயத்தும் மூன்று வியங்களில் கூட்டாகும்.

முதலாவது:- இல்முல்லதுன்னி - கடாட்ச ஞானம் உண்டாகிறது.

இரண்டாவது:- கராமாத்து - அற்புத நிகழ்ச்சிகள் உண்டாகிறது.

மூன்றாவது:- கியாலுடைய உலகத்தை -மறைவான உலகத்தைப்பார்ப்பது,ஆகியவைகளாம்.

(ஜனங்கள் தூக்கத்தில் பார்க்கிற லோகத்தை நபிமார்களும், அவ்லியாக்களும் விழிப்பில் பார்க்கிறார்கள்.)

ஆனால், வசனிப்பதில் மாத்திரம் அவையிரண்டும் வித்தியாசப்படும். நபியுடன் எப்படிப் பேசப்படுமோ, அப்படி அவ்லியாக்களுடன் பேசப்படமாட்டாது.

(நபிமார்களோடு நேரடியாகவும், முன்னாலேயும் பேசப்படும். அவ்லியாக்களுடன் நபிமார்களது வாஸிதா - தொடர்பு கொண்டும் முதுகுப்புறமாக இருந்தும் பேசப்படும். அறிந்து கொள் - றஸூலாக இல்லாத நபியாகிறவர்கள் அவர்கள் தங்கள் வரைக்கும் வணங்குவதற்காக மார்க்க சம்பந்தமான ஒரு கட்டளையைக் கொண்டு வஹீ அனுப்பப் பட்டவராகும்.அதைப் பிறரும் செய்யும்படி அனுப்பப்படுமானால் அவர்கள் றஸூலாகவுமா வார்கள். நபியிடத்தில் மலக்கு இரண்டு விதமாக வஹீ கொண்டு வருவார். ஒரு சமயம் நபியின் கல்பில் பலவிதமாக இறங்கி தான் கொண்டு வந்ததை நபியின் கல்பில் போடுவார் ; ஒரு சமயம் சடரூபமெடுத்து வெளியில் வந்து தான் கொண்டு வந்ததை நபியின் காதில் போடுவார் ; நபி அதைக் கேட்பார்கள். அல்லது அதை அவர்களின் கண்ணில் போடுவார்; அவர்கள் அதைப் பார்ப்பார்கள்.அவர்களுக்கு அதைக் கேட்பதிலுண்டானது போலவே பார்ப்பதிலும் சரியானபடி விளக்கமுண்டாகும்; இது போலவே மற்றப்புலன்களிலும் போடுவார். இந்த வாசல் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வபாத்திற்கு பிறகு அடைக்கப்பட்டுவிட்டது. கியாமநாள் வரையிலும் யாருக்கும் திறக்கப்படமாட்டாது. ஆனால் வலிமார்களுக்கு வஹ்ய இல்ஹாமி இருக்கிறது. அதில் மார்க்கமாக வணங்கக்கூடிய எந்த ஒரு விசயத்தைப் பற்றியுமிருக்காது. எங்கிலும் மார்க்கத்தில் ஒரு ஹுக்மு

*பிசகாகி அதற்கு ஆதாரமாகக் காட்டக் கூடிய ஹதீதைப் பற்றி சில ஜனங்களால் அது ஸஹீஹானது என்று சொல்லப்பட்டதை அது ளஈபானது என்றோ அல்லது ளஈபானது என்று சொல்லப்பட்டதை அது ஸஹீஹானது என்றோ மறைமுகமாக மலக்கின் வாயால் இல்ஹாமாக அறிவிக்கப்படும். அவர் மலக்கை காணமாட்டார். ஏனென்றால் மலக்கைக் காண்பதும் அவர் வார்த்தையைக் கேட்பதும் இவ்விரண்டும் ஒன்றாக நபிமார்களுக்கேயல்லாது வாய்க்காது. வலியோ சப்தத்தைக் கேட்டால் மலக்கைப்பார்க்கமாட்டார். மலக் கைப் பார்த்தால் அவர் சப்தத்தைக் கேட்க மாட்டார். ஏனென்றால் வலிமார்களுக்கு அறிவிக்கப்படுகிற வஹியால் மார்க்கத்தையுண்டாக்குவது இல்லையே.அவர்களுக்கு அறிவிக்கப்படுவதெல்லாம் அவர்கள் தவறிப்போகாதிருக்கும் பொருட்டு ஷரீஅத்தின் ஹுக்முகளைப் பற்றிய எதார்த்தத்தை விளக்கி வைப்பதுவேயாகும்.*

*ஷெய்குனா முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி குத்திஸஸிர்ருஹு அவர்கள் நபிமார்களுக்கு நுபுவத்தினுடைய இஸ்மை-அசல் பெயரைக் கொடுக்கப் பட்டிருக்கிறது. எங்களுக்கு அதன் லகபை - இடுபெயரைக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். அதாவது அல்லாஹுதஆலா அவனுடைய வசனங்களின் கருத்துக்களையும் அவனின் றஸூலுடைய வார்த்தைகளின் கருத்துக்களையும் எங்களுக்கு எங்கள் இருதயத்தில் அறிவித்துத் தந்திருப்பதோடு எங்களை நபியென்று பெயர் சொல்வதை விட்டுத் தடுத்திருக்கிறான் என்பதாம். இந்த மகாமுடையவர் களை அவ்லியாக்களில் அன்பியாக்கள் என்று சொல்லப்படும். இன்னமும் ஷெய்குனா முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி குத்திஸஸிர்ருஹு அவர்கள், நபிமார்களே ! உங்களுக்கு லகபை - இடுபெயரைக் கொடுக்கப்பட்டிருக்கிறது ; உங்களுக்கு கொடுக்கப் படாததை யெல்லாம் எங்களுக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது.என்றும் சொல்லியிருக்கிறார்கள். கருத்தாகிறது நபிமார்களுக்கு நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை பின் துயர்வதின் லகபை -இடுபெரைத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஹுக்மில் - மார்க்கத்தின் நோக்கம் - கருத்தில்தான் துயர்ந்தவர்கள் ஆனால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை உள்ளாலுள்ள படி துயர்ந்தவர்கள். அவர்களின் உம்மத்திலுள்ள அவ்லியாக்கள் தான். ஏனென்றால் அவர்கள் தான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய மார்க்கத்தின் கருத்திலும், உருவத்திலும் - அந்தரங்கத்திலும் ஷரீஅத்தின் உருவத்திலும் உள்ளும் புறமும் துயர்ந்திருக்கிறார்கள். அவர்களேதான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஹகீகத்தாகவும் மஜாஸாகவும் -எதார்த்தத்திலும்,புழக்கத்திலும் பின்துயர்ந்தவர்கள்.அவர்களல்லாதவர்களெல்லாம் ஏதோ ஒரு வகையில் அல்லது குறிப்பான பலவகைகளில் தான் பின்பற்றியவர்களாவார்கள். எல்லா வகைகளிலும் சம்பூரணமாக நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின் பற்றியவர்கள் அவர்களின் உம்மத்திலுள்ள சம்பூரணமான வலிமார்களேயாவார்கள் என்பதாம்.)*

*அவ்லியாக்கள் நபிமார்களைப் போலவே ஏற்றம டைகிறார்கள் என்றோ, அவர்களை விடவும் உயர்ந்த மகாமில் ஏறி விடுவார்கள் என்றோ கருத்துக் கொள்ளக்கூடாது. இது ஒரு போதும் நடக்கக்கூடிய கருமமன்று. இவ்விரு வகையினரும் மகாமாத்துக் களின் அசலில் ஒன்றுபட்டாலும் நபிமார்களுடை*

டய ஏற்றம் அசல் பிரகாசத்தைக் கொண்டதாகும். அவ்லியாக்களோ, நபிமார்களின் பிரகாசத்தின் அருளைக் கொண்டேதான் மகாமாத்துகளில் ஏறுகிறார்கள். அன்பியாக்களும், அவ்லியாக்களும் தவக்குல் - பரஞ்சாட்டுதல் முதலிய மற்ற மகாமாத்துக்களின் அசலில் சேர்ந்திருப்பதில் ஒன்று பட்ட போதிலும், அவைகளின் பலவகையான வகை விபரங்களில் ஒற்றுமை இருக்காது. மகாமை ஏற்றிக் கொள்வதினால் மட்டும் வரிசை ஏற்பட்டுவிடாது. மகாம்களின் பலதரப்பட்ட வகைகளைக் எட்டிக் கொள்வதைக் கொண்டேதான் வரிசையாகும். இந்த வகைகளைக் கொண்டேதான் தவக்குல் உடைய மகாமில் உள்ளவர்களுக்கிடையிலும் பதவிகள் விதற்பமாக ஏற்றத் தாழ்வாக ஆகிறது.(உதாரணமாக:-றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய தவக்குல் மற்ற நபி மார்களுக்கு இல்லை.நபிமார்களுக்கு இருந்தது போன்ற தவக்குல் வலிமார்களுக்கு இல்லை.)இதைப்போலவே மற்றும் மகாம்களையும், ஹால்களையும் கவனித்துக் கொள்ளவும்.

மேலும் அறிந்து கொள்ளுங்கள் !

ஒவ்வொரு வலியும் அவரது நபியின் ரூஹானிய்யத்தைக் கொண்டு -அதாவது அவர்களது ஷரீஅத்தின் வழியிலேயே அல்லாஹுதஆலா அளவில் உயருகிறார்கள். பூரணமான கமாலியத்தை உடைய அவ்லியாக்கள் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய உதவி எப்படிக் கிடைக்கிறது? என்ற விபரத்தை அறிகிறார்கள். சிலர், அது எப்படிக் கிடைக்கிறது? என்பதையும் அறியமாட்டார்கள். இவர்கள், தங்களோடு அல்லாஹ்தான் பேசுகிறான் என்பதாக நினைக்கிறார்கள்.ஆனால்உண்மையில் அவர்களோடு பேசியது அவர்களுடைய நபியவர்களின் ரூஹாஹ இருக்கும்.இன்னும் இங்கு அநேக அபூர்வ அதிசய சங்கதிகள் உள்ளன. அவைகளை விபரிப்பதற்கு இச்சிறு நூலில் இடமில்லை.

உம்மத்து முஹம்மதிய்யாவிலுள்ள அவ்லியாக் களில் சிலர் முன்னுண்டான எல்லா நபிமார்களுடைய மகாம்களுக்குமே வாரிசுகளாகவும் இருப்பார்கள்.சிலர் ஒன்றிரண்டு அல்லது அதற்கதிகமான நபிமார்களுடைய வாரிசுகளாகவு மிருப்பார்கள். இவர்கள் நபிமார்களின் வாரிசுகளாக இருக்கிறார்கள் என்பதன் கருத்தாவது, நூரு முஹம்மதிய்யாவிலிருந்து மற்ற நபிமார் களுக்குக் கிடைத்த அதே பைளு - அருள் இவர்களுக்கு கிடைக்கிறது என்பதாம். ஏனென்றால், முந்திய எல்லா நபிமாருடைய ஒளிவுகளும் நூருமுஹம்மதியா வுக்குள்ளே உட்புகுந்திருக்கின்றன. அவைகளை யெல்லாம் நூரு முஹம்மதிய்யா தன்னுள் சேர்த்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, நூருமுஹம்மதிய்யா விலிருந்து மூஸா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குக் கிடைத்த நூர் எந்த வலிகுக் கிடைக்குமோ அந்த வலிக்கு இந்தச் சம்பந்தத்தைப் பொறுத்து இவர் நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வாரிசு எனப்படும்.நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு பைளு கிடைப்பதற்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு என்ன சம்பந்தமுண்டோ அதுவே இந்த வலிக்கும் உண்டாகும். ஒருக்கால் இவர் மரணமாகும் வேளையில் இவர் எந்த நபியின் சம்பந்தம் கொண்டிருக்கிறாறோ அந்த நபியுடைய தோற்றம் இவர் முன்னால் தரிசனையாகும். இவர் அந்த நபியை நினைத்துக் கொண்டு அவர்களைப் பற்றியே பேசிக்கொண்டும் இருப்பார். தெரியாத ஜனங்கள் இவர் எஹூதி அல்லது நஸாறாவாகி விட்

டார் என்றும் நினைப்பார்கள். ஆனால் குதுபுக்கோ, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஸூறத்துக் காட்சியாகும். இவரது சம்பந்தமும் தொடர்பும் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடனே இருக்கும்.

(அஹ்லுல்லாக்களாகியஅவ்லியாக்கள் வபாத் தாகும் போது அவர்களின் முன்னால் இல்முடைய உருவத் தோற்றம், அமலுடைய உருவத்தோற்றம், கொள்கையுடைய தோற்றம், மகாமுடையதோற்றம், றஸூலுடைய தோற்றம், மலக்குக ளுடைய தோற்றம் தெய்வீக இஸ்முகளில் ஒரு இஸ்முடைய தோற்றம், நஃதுடைய இஸ்முகளில் ஒரு இஸ்முடைய தோற்றம், குத்தூஸ் - தூய்மையானவன் என்பது போன்ற தன்ஸீஹிய்யாவான இஸ்முகளில் ஏதாவது ஒரு இஸ்முடைய தோற்றம், ஹூ என்னும் இஸ்மைப் போல் தாத்துடைய இஸ்முகளில் ஏதாவது ஒன்றின் தோற்றம் உண்டாகும்.)

நான் முதன்முதலாக நபி ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடைய கல்பின் பேரிலிருக்கிற ஒரு ஷெய்கைச் சந்தித்தேன். பின் மூஸா நபி (அலைஹிஸ்ஸலாம்) இப்ராஹீம் நபி (அலைஹிஸ்ஸலாம்) மற்றும் நபிமார்களுடைய கல்புகளோடு சம்பந்தம் வைத்திருந்த அனேக ஷெய்குமார்களையும் சந்தித்தேன். இந்த சங்கதிகளை நமது தரீக்கா நண்பர்ளைத் தவிர மற்றவர்களால் அறிய முடியாது.

மேலும் அறிந்து கொள்ளுங்கள் !

நமது நாயகம் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தான் ஆலமுல் அற்வாஹில் எல்லா நபிமார்களுக்கும் அவரவர் களுக்குக் கிடைத்த அறிவுக ளையும், ஷரீஅத்துக் களையும் மகாமாத்துக்களையும் அருளினார்கள். கடைசியாக எல்லா ஜனங்களையும் நேர்வழி காட்டுவதற்காக தாங்களே வந்தார்கள். நபி கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் நபி இல்யாஸ் அலைஹிஸ்ஸலாம் இவர்களைப் போல இப்பொழுது பிரசன்னமாயிருக்கக்கூடியவர்களும் நபி ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களைப் போல வானிலிருந்து இறங்கி வரக்கூடியவர்களும் எம்மைப்போல்நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உம்மத்துக்களேயாவார்கள்(எம்மைப் போலவே அவர்களும் நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது ஷரீஅத்தைப் பின்பற்றுவது அவசியமாகும்.)

முன்னுண்டான நபிமார்களின் உம்மத்துக்க ளிலுள்ள வலிமார்கள் தங்களுடைய பாகத்தைத் தங்களுடைய நபிமார்களிலிருந்து எடுத்தார்கள். அவர்களுடைய நபிமார்கள் நம்முடைய நபி றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிலிருந்து எடுத்தார்கள். ஆகவே, றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிலிருந்து அருளை எடுப்பதில்நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உம்மத்திலுள்ள அவ்லியாக்கள் முன்னுண்டான நபிமார்களைப் போலாகி றார்கள். இதனாலேயே என்னுடைய உம்மத்திலுள்ள உலமாக்கள் பனீ இஸ்ராயீல்களுடைய நபிமார்களைப் போலாவார்கள் விஎன்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்.

மேலும்,அல்லாஹுதஆலா,நீங்கள் ஜனங்களைப்பற்றிச் சாட்சியம் கூறுகி றவர்களாக இருக்கவும், உங்களைப் பற்றி றஸூல் சாட்சியம் சொல்லு கிற வர்களாக இருக்கவும் என்று திருமறையில் கூறியுள்ளான்.

ஆகவே உங்களுக்கு மிகவும் மேலாம்பரமான ஏற்றம் உண்டாவதற்காக நீங்கள் உங்கள் கல்வத் தில் முஹம்மதியாவான பூரண அனந்தரத்தை எடுப் பதன் பக்கமே உங்களுடைய முழு ஊக்கத்தை யும் கவனத்தையும் செலுத் துங்கள்.

அறிந்து கொள்ளுங்கள்! எல்லா அஹ்வால்களையும், மகாமாத்துக்களை யும் ஒன்றோடொன்று கலந்து போடாமல் ஒவ்வொரு ஹாலிலும், வக்திலு ம் அது அதுக்கு லாயிக்கானபடி புழங்குகிறவரே ஹகீமும், காமில் முஹக்கி குமாவார் - சம்பூரண அதிவிவேகப் புருஷராவார். இவரே முஹம்மது ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வாரிசுமாவார். ஏனென்றா ல் மலாமதிய்யாக்களுக்கு சற்குரு எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலை ஹி வஸல்லம் அவர்களாவார்கள்.(அஸ்ஹாபுல் ஹிக்மத் - சம்பூரண அதிவி வேக புருஷர்களாகிய மலாமதிய்யாக் கள் ஒவ்வொரு வேலையையும் இடத் திற்கும், சமயத்திற்கும் தக்கவாறே செய்வார்கள். இவர்கள் தான் தரீக்காக்க ளின் சற்குருக்களாவார்கள். இவர்களுக்கு விஷத்தாரிய்யீன்,அஹ்லுல் மஹப் பது - ஆஷிகீன்கள் என்றும் சொல்வார்கள். இவர்கள் எல்லோர்களுக்கும் ச ற்குரு எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாவ ார்கள்.)

பாருங்கள்! நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அல் லாஹுத்தஆலாவினுடைய சமூகத்தில் காப கவுஸைனி என்ற மகாமுக்கும், அதற்கப்பாலும் சென்றார்கள். ஆனால் அவர்கள் பேரில் (அதன்) எவ்விதம ான குணபாடுகளும் வெளியாகவில் லை. இதனாலேயேதான் எதிரிகள் மிஃ றாஜை மறுத்தார்கள். நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தூர் ஸீனா ம லைக்குப் போனதும் அதன் குணபாடு அவர்களில் தென்பட்டது.எதிரிகள் மறுதலிக்க முடியாம லிருந்தனர்.(ஹளரத் மூசா அலைஹிஸ்ஸலாம் அவர்க ள் அங்கு ஹக்குதஆலாவின் தஜல்லியைக் கண்டு வந்ததும் அவர்களது நெ ற்றியில் எவராலும் கூர்ந்து பார்க்க முடியாதவிதத்தில் அதிக வெளிச்சமான ஒளிப் பிரகாசச் சுடர்வீசியது.அதனால், ஜனங்களிடத்தில் அவர்கள் ஹக் கு தஆலாவைத் தரிசித்து வந்ததைப் பற்றி நம் பிக்கை ஏற்பட்டது.)

முக்கியமாக கவனிக்க வேண்டியது ஸாலிக்கின் பேரில் பற்பல அஹ்வால் களும், அதனதன் குணபாடுகளைச் செய்யும்போது ஸாலிக்கு அவைகளை ஏ ற்றுக் கொள்வான். (அவனில் கறாமாத்து கௌனிய்யா - உலகாய அற்பு தங்கள் வெளியாகும்) ஆகையால், அவன் அந்நேரம் அதைவிட்டுச் சீக்கிரம ாகக் கடந்து ஹிக்மது இலாஹிய்யாவினுடைய மகாமுக்குப் போய்ச் சேரவே ண்டும். அதாவது, வெளிரங்கத்தில் வழக்கமாக நடந்து கொண்டிருக்கு ம் முறைக்கு ஏற்றதாகவே நடக்க வேண்டும். வழக்கத்திற்கு மாற்றமான க றாமாத்து - அற்புதங்களை வெளியாக்கு வதைவிடுத்து (கறாமாத்து இலாஹி ய்யா - தெய்வீக அற்புதமான அருள் ஞானத்தை வெளியாக்கு வதளவில்) த ன் கவனத்தைச் செலுத்த வேண்டும். ஒவ்வொரு மூச்சிலும் றப்பி - ஸித் னீ -இல்மா ஆண்டவா எனக்கு ஞானத்தை அதிகப்படுத்து என்று சொல்ல வே

வண்டும், இன்னும் அவனுடைய வக்த்தே அவனுக்கு சுவாசமாக ஆகுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும்,(அதாவது, அவன் கல்பில் வரக்கூடிய அஹ்வால்கள் சுவாசம் போல் எந்நேரமும் வந்து போவதற்குத் தெண்டிக்க வேண்டும்.) கல்பில் வரக்கூடிய வக்தின் பேரில் ஆசை கொள்ளக்கூடாது; என்கிலும் அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.ஏனென்றால், அவன் ஷெய்காக ஆகி ஜனங்களை நேர் வழிகாட்டும் மகாமுக்கு வருவானேயானால் முரீதீன்களை அதைவிட்டும் மேலே உயர்த்திச் செல்வதற்கு அவசியப்படும்.சில ஷெய்குமார்கள் மகாமாத்துகளை கவனிப்பதை விட்டுவிட்டு ஹக்குதஆலாவுடன் கலப்பற்ற ஹுளூரையே - ஐக்கியத்தையே அபிவி ருத்தி செய்து கொண்டிருந்தார்கள். ஆகவே, சிலருக்கு ஒவ்வொரு நாளிலும், சிலருக்கு ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும், சிலருக்கு ஒவ்வொரு மாதத்திலும், சிலருக்கு ஒவ்வொரு வருஷத்திலும், இன்னும் சிலருக்கு வயது பூராவிலும் ஒரு விடுத்தமே,ஐக்கியம் உண்டாகியிருந்தது.இன்னும் சில ருக்கு ஒரு நேரமும் ஐக்கியம் ஏற்படாமலும் இருந்தார்கள்.எவர்கள் தங்களின் சுவாசத்தை பேணிக்கொண்டார்களோ அவர்களுடைய வக்தும், ஸாஅத்தும் - நேரமும், காலமும் பாதுகாக்கப்பட்டு விடும்; எவர்கள் அப்படி இருக்கவில்லையோ அவர்கள் எல்லாவற்றையும் பழுதாக்கியவர் களாவார்கள்.மனிதனுடைய உயரிய ஊக்கத்தைக் கொண்டேதான் அவனுடைய வக்து,மர்தபா - நேரம்,பதவி,அறிவு வரிசையை மதிப்பிடப்படும்.எவன் ஊக்கமில்லாமல் இறைவழி நடப்பதற்கு அடிஎடுத்து வைக்கிறானோ அவனுக்கு உவமானம் முடவன் வேலை செய்வதற்கு நாடுவது போலாகும். எவன் சுவர்க்கத்தை ஆதரவு வைத்து இபாதத்து செய்கிறானோ அவன் ஆபிதும் ஸாஹிபுல் மின்பறும் - வணக்காவாளியும் சுவர்க்கத்தில் பதவியையுடையவனுமாவான். அவன்,நாம் விபரித்து வந்த வெளிப்பாடுகளை எல்லாம் விட்டும் நிர்பாக்கியசாலியாவான்.இதேபோல் எவன் முகஸ்துதிக்காக இபாதத்துச் செய்கிறானோ அவன் சுவர்க்கத்தைவிட்டும் நற்கூலியை விட்டும் கூட பேறு கெட்டவனாவான். எவனுடைய மனதில் ஆலமுல் முல்கின் - தூல உலகின் கொளுக்கு அணுவளவாகிலும் எஞ்சியிருக்கிறதோ அவனுக்கு ஆலமுல் மலகூத்தின் - ஆன்ம உலகின் கதவு திறக்கப்படமாட்டாது . எவனுடைய மனதில் ஆன்ம உலகின் கவனம் இருக்கிறதோ அவனுக்கு தெய்வ கடாட்ச ஞானத்தின் வாடை கூட எட்டாது. ஆகவே ஸாலிக்கின் பேரில் கடமை அவன் அத்துவித சமுத்திரத்தில் போய் சேரும் வரையிலும் பூரண வைராக்கியத்தோடு முகநோக்க வேண்டும். அங்கு போனதும் அவன் ஊக்கமும், வேகமும் ஒடுங்கிப் போகும். அங்கு அவனுடைய சேர்மானத்துக்கு முடிவைக் காணமாட்டான். ஏனென்றால் வெளியாகிறவன் - ஹக்குதஆலா ஒருவனாகவே இருந்த போதிலும் வெளியாகிற விதங்கள் - வகைகளுக்கு ஒரு முடிவுமேயில்லை. ஆகையால் வாஸிலாகியவன்-இறைவன் சன்னிதானத்தில் சேர்ந்தவன் எப்போதும் தாகித்தவனாகவும் அச்ச முடையவனாகவுமே யிருப்பான். (ஒவ்வொரு காட்சியிலும் புதிது புதிதான சுகமும், ஆனந்தமும் கிடைப்பதினால் தாகித்த வனாகவும் எங்கு காட்சி நின்று போய்விடுமோ வென்று பயந்தவனாகவுமிருப்பான்) அமல் செய்கிறவர்கள் இம் மாதிரியான அமல்களையே செய்ய வேண்டும்.அவேட்கை வைப்பவர்கள் இவ்விதமான பாக்கியங்களையே அவேட்கை வைக்க வேண்டும்.சர்வ புகழும் அகில உலகத்தையும் வளர்க்கும் நாயனுக்காக இருக் கும்.

*இந்த நூலை ஹிஜ்ரி 602-ம் வருடம் யூனான் தேசத்து கூனியா என்னும் ஊரில் நமது சகோதரர் ஒருவருக்காக எழுதினோம் என்று ஷெய்குனா முஹ்யித்தீன் இப்னு அறபி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள்.*